தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.11.2013**

**கோமாரி நோய் வரும்முன் தடுப்பூசி போட வேண்டும்**

விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வரும் முன் தடுப்பூசி போட வேண்டும் என்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் பேசியது:

நமது மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்கள் நிலங்களில் தானாகவே முன்வந்து பண்ணைக் குட்டைகள் அமைக்க வேண்டும். அதற்கு மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்ட பணியாளர்களை பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வருவதற்கு முன்பே சிறப்பு முகாம்களுக்கு அழைத்துச் சென்று தடுப்பூசி போட்டு கால்நடைகளை நன்கு பராமரிக்க வேண்டும்.

நடப்பு சம்பா பருவாத்துக்கு கூடுதலாக நெல் விதைகள், உரங்கள் அனைத்தும் வேளாண்மை விரிவக்க மையங்களில் இருப்பு உள்ளதாகவும், கூட்டுறவுத் துறை மூலம் குறைகள் தீர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

இக் கூட்டத்தில் ஆட்சியர் பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் பட்டு மல்பரி நடவு செய்த 31 விவசாயிகளுக்கு ரூ.1.29 லட்சம் மதிப்பில் காசோலையாக மானியத் தொகையும், 2012-13-ம் ஆண்டில் சிறந்த விவசாயிகளுக்கான பரிசு வழங்கும் இனத்தின் கீழ் நெல், மக்காச்சோளம், பயிர்களில் உப வடிநில வாரியாக 24 விவசாயிகளுக்கு ரூ.80 ஆயிரம் மதிப்பில் பரிசுத் தொகைக்கான காசோலையும் வழங்கப்பட்டன.

இக் கூட்டத்தில் விவசாயிகள் பேசும்போது ஒலக்கூரில் தொடங்கப்பட்ட காய்கறி சேமிப்பு மையங்களுக்கு விவசாயிகள் தங்கள் காய்கறிகளை கொண்டு வருவதில்லை. அங்கு வியாபாரிகள் அதிகம் வராததால் விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். எனவே, கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயிகளின் காய்கறிகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இக் கூட்டத்தில் திட்ட இயக்குநர் க.முத்து மீனாள், வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.சக்கரவர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சு.ராஜசேகரன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராஜு, தமிழ்நாடு மின்சார வாரிய கண்காணிப்பு பொறியாளர்கள் ஜி.ராசு, ஆர்.சிவராசு, நீர்ஆதார அமைப்பு செயற்பொறியாளர் பி.ஜெயராமன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.சிங்காரம் மற்றும் அரசு துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள்: பதிவு செய்ய அறிவுறுத்தல்**

உடன்குடி பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை குறித்த விவரங்களை உடனடியாக பதிவு செய்ய வேண்டும் என உடன்குடி வேளாண்மை அலுவலகம் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து உடன்குடி வேளாண்மை உதவி இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: உடன்குடி வட்டாரப் பகுதியில் தென்னை சாகுபடியாளர்கள், தாங்கள் சாகுபடி செய்துள்ள தென்னையில், கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் தென்னை மரங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பாதிக்கப்பட்டு

இருந்தால், அதுகுறித்த விவரங்களை வேளாண்மை அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் நில உடமை ஆவணங்களுடன் வேளாண் அலுவலர்,உதவி வேளாண்மை அலுவலர் அல்லது உடன்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றார் அவர்.

**கோமாரி நோய் பாதிப்பால் உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வேண்டும் : விவசாயிகள்**

திருச்சி மாவட்டத்தில் கோமாரி நோய் பாதிப்பால் உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வலியுறுத்தினர் விவசாய சங்கப் பிரதிநிதிகள்.

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய விவசாய சங்கப் பிரதிநிதிகள் இந்த கருத்தை மையமாக வலியுறுத்தியே பேசினர்.

திருச்சி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் மாடு, ஆடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்டத்தில் உயிரிழந்த மாடுகள்எண்ணிக்கை எவ்வளவு எண்ணிக்கை என்ற விவரத்தை மாவட்ட நிர்வாகம் தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தினார் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலர் அயிலை சிவ.சூரியன்.

கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த கால்நடைகள் பற்றிய விவரங்கள் சரியாகத் தெரிவிக்கப்படவில்லை. அதிகாரிகளை வைத்து கணக்கெடுத்தால் எந்தவிவரமும் கிடைக்காது. அந்தந்த பகுதிகளிலுள்ள கிராம நிர்வாக அலுவலர், கால்நடை மருத்துவர் கொண்ட குழு மூலமாக உயிரிழந்த கால்நடைகளின் எண்ணிக்கை குறித்த கணக்கெடுப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும். உயிரிழந்த மாட்டுக்கு ரூ.30,000-மும், ஆடு ஒன்றுக்கு ரூ.10,000 -மும் இழப்பீடு தொகையாக வழங்க வேண்டும் என்றார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி விவசாயப் பிரிவுமாநிலத் துணைத் தலைவர் புலியூர் ஏ.நாகராஜன்.

இதே கருத்தை வலியுறுத்தி இதர விவசாய சங்கப்பிரதிநிதிகளும் பேசினர். இக்கேள்விகளுக்குப் பதிலளித்த மாவட்ட ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன்,

கோமாரி நோய்த் தாக்கி உயிரிழந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்த முடிவை எடுக்கும் நிலையில் நாங்கள் இல்லை. கொள்கை ரீதியாக முடிவை அரசுதான் அறிவிக்க முடியும்.

கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்கள் எவை என்று குறிப்பிட்டுச் சொன்னால் விசாரணை நடத்தப்படும் என்றார்.

**கோமாரி: கால்நடைகளை இழ**

கோமாரி நோய் பாதிப்பால் இறந்த கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு கர்நாடகா மாநிலத்தைப் போல ரூ. 25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

புதுக்கோட்டையில் வியாழக்கிழமை மாவட்டச் செயலர் த. செங்கோடன் தலைமையில் நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மாவட்டத்தில் அதிகரித்து வரும் கோமாரி நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்த போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் மழையை நம்பி விதைத்த நெற்பயிர்கள் போதிய மழையின்மையால் பாதிப்படைந்து வருகின்றன. காவிரி பாசனப் பகுதிகளும் வறண்டு வருகின்றன.

எனவே விவசாயப் பாதிப்பை கணக்கீடு செய்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

பொன்னமராவதியில் இருந்து லேணாவிளக்கு வழியாக அறந்தாங்கி பேருந்து வசதி வேண்டி பல்வேறு போரட்டங்கள் நடத்தியும், போக்குவரத்துத்துறையும், மாவட்டநிர்வாகமும் நடவடிக்கை எடுக்காத நிலையில், இக்கோரிக்கையை வலியுறுத்தி மாபெரும் மக்கள் இயக்க போரட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு, மாவட்ட துணைச்செயலர் ஏனாதி ஏ.எல். ராசு முன்னிலை வகித்தார். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ஜெ. லெட்சுமணன் உரையாற்றினார்.

மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கே.ஆர். தர்மராஜன் வீ.சிங்கமுத்து பெரி. குமாரவேல், கே.எஸ். அழகர்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயப் பாசனக்குழாய் அமைக்கக்கோரி போராட்டம்**

புதுக்கோட்டை அருகே தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்படும் பகுதியில் பாசனத்துக்கான குழாய்களை அமைக்காமல் விட்டதற்காக அப்பகுதி மக்கள் வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை அருகே திருவப்பூர் - நமனசமுத்திரம் வழித்தடத்தில் திருச்சி, காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றனர். இப்பகுதியில் கவிநாடு கண்மாயில் இருந்து சுமார் 16 பாசனக் கால்வாய்கள் மூலம் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவு பாசன வசதி பெறுகின்றன. இந்நிலையில், சாலையின் குறுக்கே 16 குழாய்களை அமைக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் மாவட்ட நிர்வாகத்திடம் மனு அளித்தனர். ஆனால், 13 குழாய்கள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. மூன்று குழாய்கள் விடுபட்டுப் போனதாம். இது குறித்து அகரப்பட்டி பகுதி விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்துக்கு புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை. இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் பொக்லைன் இயந்திரம் மூலம் விடுபட்டுப்போன மூன்று இடங்களில் குழாயைப் பதிக்கும் வகையில் பள்ளம் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த தேசிய நெடுஞ்சாலைத் துறையினர் அங்கு சென்று தடுத்த போது, இரு தரப்பினருக்கும் மோதல் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து அங்கு சென்ற திருக்கோகர்ணம் காவல் ஆய்வாளர் கருணாகரன் நடத்திய பேச்சுவார்த்தையில், வரும் 10 நாள்களுக்குள் குழாய் பதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக்கூறியதையடுத்து, அனைவரும் கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

**நெல் விதை கிராம திட்டப் பயிற்சி**

பேராவூரணி வேளாண் கோட்டத்தைச் சேர்ந்த சொர்ணக்காடு, பட்டத்தூரணி கிராமங்களில் விவசாயிகளுக்கான நெல்விதை கிராமத் திட்ட பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

பயிற்சி முகாமுக்கு ஒன்றியக் குழுத் தலைவர் சாந்தி அசோக்குமார் தலைமை வகித்தார். சொர்ணக்காடு ஊராட்சித் தலைவர் எம். சண்முகநாதன் முன்னிலை வகித்தார்.

பயிற்சி முகாமை தொடங்கிவைத்து வேளாண் துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) சீனிவாசன் பேசியது:

விவசாயிகள் விதைகளை பயன்படுத்தும்போது அவை தரமானதாகவும், முளைப்புத் திறனுடையதாகவும் இனத்தூய்மை, புறத்தூய்மை, பூச்சிநோய் தாக்காத எதிர்ப்புத் திறன் கொண்ட பருவத்திற்கேற்ற உயர் விளைச்சல் தரும் ரக விதைகளையே பயன்படுத்த வேண்டும்.

விவசாயிகள் விதைகளை எப்படி தயார் செய்ய வேண்டும் என்பதை விளக்கவே

இந்த பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. விவசாயிகள் தங்கள் கிராமத்தின் மண்வளத்திற்கேற்ப விதை ரகங்களை தேர்வு செய்து விதைப்பண்ணையில் பதிவு செய்து கொண்டால் விதைச்சான்று அலுவலர்கள் பார்வையிட்டு தக்க ஆலோசனைகளை வழங்குவார்கள். எனவே, விவசாயிகள் இப்பயிற்சியினை முழுமையாக பயன்படுத்தி கொண்டு விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்தி அதிக மகசூல் பெற வேண்டும் என்றார்.

விதைச்சான்று உதவி இயக்குநர் பாண்டியராஜன் பேசும்போது, விவசாயிகள் ஆதாரம் மற்றும் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும் என்றார்.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு நோட்டு, புத்தகம், கையேடு, ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. பயிற்சியில் விதைச்சான்று அலுவலர் விஜயகுமார், விதைச்சான்று துணை இயக்குநர் மனோகரன் மற்றும் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மானிய விலையில் தீவனம் பெற அடையாள அட்டை அவசியம்**

வறட்சி நிவாரணத் திட்டம் மூலம் மானிய விலையில் உலர் தீவனம் பெற விரும்பும் விவசாயிகள், கால்நடை பராமரிப்புத் துறை மூலம் அடையாள அட்டைப் பெற வேண்டும்.

இதுகுறித்து நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகை மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் வறட்சி நிவாரண உலர் தீவன விற்பனை மையம் 3 இடங்களில் அமைக்கப்படவுள்ளது. நாகை கோட்டத்தில் கீழ்வேளூர் மற்றும் வேதாரண்யத்தில் கால்நடை மருந்தகங்களிலும்,

மயிலாடுதுறை கோட்டத்தில் சீர்காழியில் கால்நடை மருத்துவமனையிலும் இந்த மையம் அமைக்கப்படவுள்ளது.

இந்த விற்பனை மையத்தில் உலர் தீவனங்கள் ஒரு கிலோ ரூ. 2-க்கு விற்பனை செய்யப்படும். ஒரு கால்நடைக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் தீவனம் வழங்கப்படும். ஒரு வாரத்துக்கு ஒரு குடும்பத்துக்கு 5 கால்நடைகளுக்கு மட்டும் தீவனம் வழங்கப்படும்.

இந்த விற்பனை மையங்கள் மூலம் உலர் தீவனங்கள் பெற விரும்பும் சிறு, குறு விவசாயிகள், அருகிலுள்ள கால்நடை மருந்தகங்கள் அல்லது கால்நடை உதவி மருத்துவரிடம் குடும்ப அடையாள அட்டையுடன், தீவன அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

தீவன அடையாள அட்டை கிடைக்கப் பெற்ற பின்னர், அடையாள அட்டையைக் காண்பித்து, விற்பனை மையங்களில் தீவனம் பெற்றுக் கொள்ளலாம்.

**பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்**

கடந்த ஆண்டுக்கான தேசிய வேளாண் பயிர்க் காப்பீடு இழப்பீட்டை உடனடியாக வழங்கக் கோரி, மாவட்டத்தில் 10 இடங்களில் விவசாய சங்கத்தினர் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய வேளாண் காப்பீடுத் திட்ட இழப்பீட்டை உடனடியாக வழங்க வேண்டும். கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

திருவாரூரில், வட்டாட்சியர் அலுவலகம் முன்பு சங்கத்தின் மாவட்டச் செயலர் மாசிலாமணி தலைமையில் 40 பேர், கொரடாச்சேரியில் ஒன்றிய அலுவலகம் முன்பு விவசாய சங்க ஒன்றியத் தலைவர் பக்கிரிசாமி தலைமையில் 125 பேர், நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகம் முன் ஒன்றிய துணைச் செயலர் மணி தலைமையில் 45 பேர்.

குடவாசலில் விவசாய சங்க ஒன்றியத் தலைவர் நமசு தலைமையில் 13 பேர், மன்னார்குடியில் மாவட்ட விவசாய சங்கத் தலைவர் ரெங்கராஜன் தலைமையில்

சங்க மாவட்டக் குழு உறுப்பினர் ஆர். வீரமணி, கூத்தாநல்லூர் நகரத் தலைவர் மணிமாறன் உள்ளிட்ட 150 பேர், கோட்டூரில் விவசாய சங்க ஒன்றியத் தலைவர் பரந்தாமன் தலைமையில் ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் வி. தங்கையன், ஒன்றியச் செயலர் சவுந்தர்ராஜன் உளளிட்ட 215 பேர். நீடாமங்கலத்தில் விவசாய சங்க ஒன்றியத் தலைவர் பாரதிமோகன் தலைமையில் 50 பேர், திருத்துறைப்பூண்டியில் சட்டப்பேரவை உறுப்பினர் உலகநாதன் தலைமையில் மாவட்ட விவசாயத் தொழிலாளர் சங்க செயலர் ஞானமோகன், சிபிஐ வட்டச் செயலர் வையாபுரி உள்ளிட்ட 150 பேர், முத்துப்பேட்டையில் விவசாய சங்க ஒன்றியச் செயலர் யோகநாதன் தலைமையில் 47 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**உழவர் சந்தைகளில் வியாபாரிகள் காய்கறி விற்பதைத் தடுக்க வேண்டும்**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் அதிகாரிகள் ஆதரவுடன் வியாபாரிகள் காய்கறிகள் விற்பனை செய்வதைத் தடுக்க வேண்டும் என, பாமக வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் அ.சரவணன் வெளியிட்ட அறிக்கை:

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பயனடையும் வகையில் தருமபுரி, பென்னாகரம், பாலக்கோட்டில் உழவர் சந்தை தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்த காய்கறிகள் மட்டுமே இங்கு விற்பனைசெய்யப்பட்டன.

இந்த நிலையில், பருவமழை பொய்த்ததால், விவசாயிகள் உற்பத்தி செய்த காய்கறிகளை விற்பனை செய்ய அடையாள அட்டை கேட்டால் ஆய்வு செய்து அதிகாரிகள் தருவதில்லை.

மேலும், பழைய வியாபாரிகளை காய்கறிகளை விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவதாக தெரிகிறது.

இதனால், உழவர் சந்தைகளில் உள்ளூர் சந்தையை விடக் கூடுதல் விலைக்கு காய்கறிகள் விற்கப்படுவதுடன், எடையும் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும், உழவர் சந்தைகளில் குடிநீர், கழிவறை வசதிகள் போதுமான அளவில் இல்லாததால் காய்கறிகளை வாங்க வரும் நுகர்வோர் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

சந்தையில், உண்மையான விவசாயிகள் சரியான எடையில், நியாயமான விலைக்கு காய்கறிகளை விற்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு வேளாண்மைக் கருவிகள் அளிப்பு**

தருமபுரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் 19 விவசாயிகளுக்கு ரூ.13.50 லட்சம் மதிப்பிலான வேளாண் உபகரணங்கள் அளிக்கப்பட்டன.

வேளாண் பொறியியல் துறை சார்பில் 19 விவசாயிகளுக்கு ரூ.4 லட்சம் மானியத்தில் ரூ.13.50 லட்சம் மதிப்பிலான பவர்டில்லர், பேட்டரி ஸ்பிரேயர் ஆகிய உபகரணங்கள் மற்றும் பட்டு வளர்ச்சித் துறை சார்பிலி விவசாயிகள் இரண்டு பேருக்கு ரூ.37,500 மானியத்துடன் நவீன பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்களை மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர் வழங்கினார். வேளாண் தொடர்புடைய துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த செயல்விளக்கக் கண்காட்சியை ஏராளமானோர் பார்வையிட்டனர்.

**மிதமான மழை பெய்ய வாய்ப்பு**

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு மேக மூட்டமும், லேசான மழைக்கான வாய்ப்பும் நிலவும் என்று, நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் வரும் 4 நாள்களுக்கு (நவ.30 - டிச.3) வானம் லேசான, பொதுவாக மேக மூட்டத்துடன் 4 மிமீ. முதல் 6 மிமீ. வரை மழை பெய்யக் கூடும். காற்றின் திசைவேகம் மணிக்கு 4 கிமீ. முதல் 5 கிமீ வரை தென் கிழக்கிலிருந்து வீசக் கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 64.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 86 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றில் ஈரப்பதம் குறைந்தபட்சம் 45 முதல் அதிகபட்சம் 85 சதம் வரை காணப்படும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு

தற்போதைய வானிலை அடிப்படையில் மேக மூட்டமும், லேசான மழைக்கான வாய்ப்பும் நிலவுவதால் கோழிகளிடையே தீவன எடுப்பு இயல்பைவிட சற்று அதிகமாகக் கூடும். புதிய வரவு மக்காச்சோளத்திலும், சில சூரியகாந்தி புண்ணாக்கு மாதிரிகளிலும் பூஞ்சான நச்சுக் காணப்படுகிறது. அவற்றை முறையாகப் பரிசோதித்த பின் உபயோகப்படுத்தவும். பகல் வெளிச்சம் குறைய ஆரம்பித்துள்ளதால், இனி வரும் வாரங்களில் வைட்டமின் டி3 தீவனத்தில் சேர்க்க வேண்டும்.

கோழியின நோய் கண்டறிதல் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் மேல் மூச்சுக் குழாய் நோய், குடல் புண்ணால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. தவிர, ஆய்வு செய்யப்பட்ட தீவன மூலப் பொருள்களில் கிளாஸ்ட்ரிடியம், ஈகோலை நுண் கிருமிகளின் தாக்கம் அதிகளவில் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பண்ணையாளர்கள் தரமானத் தீவன மூலப் பொருள்களை உபயோகப்படுத்துவதுடன் பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு

தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சளில் காணப்படும் இலைப் புள்ளி நோய் தாக்குதல் பனிப் பொழிவு காரணமாக அதிகளவில் பரவ வாய்ப்புள்ளது. எனவே, இந்த நோய் கிருமிகளைக் கட்டுப்படுத்த மாலை வேளைகளில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ரிடோமில் என்ற பூஞ்சானக் கொல்லி மருந்தை 2 மிலி. ஒட்டும் திரவம் 1மிலி. கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோமாரி: இழப்பீடு கோரி மதிமுக ஆர்ப்பாட்டம்**

பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, மதிமுக சார்பில் கோவை காந்திபுரத்தில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த மாடுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். இறந்த மாடுகளைப் புதைக்க ரூ.5,000 தொகை வழங்க வேண்டும். பஞ்சாயத்துதோறும் இது தொடர்பாக விழிப்புணர்வு முகாம்கள் நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

கட்சியின் மாநில துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யா தலைமை வகித்தார்.

விவசாய அணி செயலாளர் பொன்னுசாமி, புறநகர் மாவட்ட செயலாளர் செந்தில், மாநில இளைஞரணி செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட நிர்வாகிகள், விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**அன்னூரில் விவசாயிகளுக்கு வங்கிக் க**

அன்னூர் அருகே பெரியபுத்தூர் ஊராட்சியில் காரமடை இந்தியன் வங்கிக் கிளை சார்பில், விவசாயக் கடன் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது .

இந்தியன் வங்கி மேலாளர் நந்தகுமார் வரவேற்றார்.

வடவள்ளி ஊராட்சித் தலைவர் கணேசன் பேசுகையில், விவசாயிகளுக்கு விவசாயக் கடன் மட்டும் வழங்கினால் போதாது; விளை பொருள்களை மதிப்புக்கூட்டப்பட்டதாக மாற்றும் தொழில்களுக்கு அரசு மானியத்துடன் குறைந்த வட்டியில் வங்கிகள் கடன் வழங்க வேண்டும் என்றார்.

கால்நடை உதவி மருத்துவர் அர்ச்சனா, இந்தியன் வங்கி மண்டல மேலாளர் ரங்கராஜன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். இதில், 10 நபர்களுக்கு பயிர்க் கடனாக ரூ.6.95 லட்சமும், 24 நபர்களுக்கு கறவை மாடு வாங்க ரூ.18.35 லட்சமும், மகளிர் குழுவினருக்கு ரூ.13.20 லட்சமும், 2 நபர்களுக்கு கல்விக் கடனாக ரூ.2.24 லட்சமும் வழங்கப்பட்டது.

**தமிழகம், புதுவையில் இன்று இரவு முதல் கனமழை**

தமிழகம் மற்றும் புதுவையின் பல இடங்களில் சனிக்கிழமை இரவு முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி இதுவரை எதிர்பார்த்த அளவுக்கு மழை பெய்யவில்லை. மேலும் வங்கக் கடலில் அண்மையில் உருவான லெஹர் புயல், தமிழக நிலப்பரப்பில் இருந்த ஈரப்பதத்தை உறிஞ்சியதால், தமிழகத்தில் கடந்த சில நாள்களாக மழை பெய்யவில்லை.

இந்த நிலையில், லட்சத்தீவுகளுக்கு அருகில் வளி மண்டல மேல் அடுக்கில் சுழற்சி ஏற்பட்டுள்ளதால், சனிக்கிழமை இரவு முதல் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: கடந்த சில நாள்களுக்கு முன்பு லட்சத் தீவுகளுக்கு அருகில், வளி மண்டல மேல் அடுக்கில் சுழற்சி ஏற்பட்டுள்ளது. இந்த சுழற்சியின் காரணமாக தமிழகம் மற்றும் புதுவையின் பல இடங்களில் சனிக்கிழமை இரவு முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இந்த மழை மேலும் சில நாள்களுக்கு தொடரும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே மழையோ, இடியுடன் கூடிய மழையோ சனிக்கிழமை பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேக மூட்டமாக காணப்படும். சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் கூடலூரில் 40 மி.மீ. மழையும் வால்பாறையில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

**பயிர்களில் ஆடுகளை மேயவிடும் விவசாயிகள்**

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே நேசநேரி பகுதியில் நெற்பயிர்களுக்கு தண்ணீர் இல்லாமல் காய்ந்துபோயுள்ளதால், தங்களது நெல் வயலில் விவசாயிகள் ஆடுகளை மேயவிடும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

நேசநேரி கிராமத்தில் விவசாயிகள் பருவமழையை நம்பி நெற்பயிர் சாகுபடியில் இறங்கியுள்ளனர். இந்த ஆண்டு, தமிழகத்தின் வடக்கு மாவட்டங்களில் நல்ல மழை பெய்த போதிலும், மதுரை மாவட்டத்தில் போதிய மழை இல்லை. இதனால், விவசாயிகள் அவதியுற்று வருகின்றனர்.

எனவே, நேசநேரி பகுதியில் நெற்பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து கருகி வருகின்றன. நேசநேரி கண்மாயில் இருந்து வரும் தண்ணீர் பாசனத்துக்கு பயன்பட்டு வந்த நிலையில், இந்த ஆண்டு பருவமழை இல்லாத காரணத்தால், கண்மாயில் வறண்டுள்ளது. இதனால், வளர்ந்திருந்த நெற்பயிர்கள் கருகத் துவங்கியுள்ளன.

கிணற்று நீர்ப் பாசனம் செய்பவர்கள் ஓரளவு தங்களது பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி காப்பாற்றிக் கொண்டனர். ஆனால், கண்மாய் நீரை நம்பி விவசாயம் செய்தவர்கள் தங்கள் கண் முன்னேயே பயிர்கள் காய்ந்து கருகுவதை கண்டு கண்ணீர் விடுகின்றனர்.

இனிமேல் பயிர்களைக் காப்பாற்ற முடியாது எனத் தெரிந்துவிட்டபடியால், தங்களது கால்நடைகளுக்காவது பயிர்கள் பயன்படட்டும் என்று எண்ணி, ஆடுகளையும், மாடுகளையும் நெற்பயிர் விளையும் வயலில் மேய விடுகின்றனர்.

இது குறித்து, கிராமத்து முதியவர் ஒருவர் கூறுகையில், இந்தப் பகுதியில் எந்தக் கண்மாயில் நீர் இல்லாமல் இருந்தாலும், நேசநேரி கண்மாயில் தண்ணீர் இருக்கும். ஆனால், இந்தாண்டு கண்மாய் வறண்டுவிட்டது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர் என்றார்.

எனவே, காய்ந்துபோன பயிர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்கினால், விவசாயிகள் ஓரளவு தப்பித்துக் கொள்வர் என இந்தப் பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**கருகும் நெற்பயிரை காப்பாற்ற பிபிஎம் நுண்ணுயிர்: மேலூரில் செயல்விளக்கம்**

மேலூர் வட்டத்தில் ஒருபோகச் சாகுபடிப் பகுதிகளில் கருகிவரும் நெற்பயிரைக் காப்பாற்ற பிபிஎம் நுண்ணுயிர் கலவையை நெற்பயிரில் தெளிக்கும்

செயல்விளக்கம், மேலூர் அருகே விநாயகபுரம் மாநில விதைப் பண்ணையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மதுரை வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை செயல்விளக்கத்தை தொடங்கி வைத்தார். இதில், மதுரை வேளாண்மை அறிவியல் மையத் தலைவர் ந.சோ. வெங்கட்ராமன், வேளாண்மைத் துறை துணை இயக்குநர் ஆர். ரவிச்சந்திரன், நீர் மேலாண்மை நிலைய உதவி இயக்குநர் கே. ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் பிபிஎம் நுண்ணுயிர் கலவை நெற்பயிரில் தெளிக்கப்பட்டது. இதை, மேலூர் பகுதி விவசாயிகள் ஏராளமானோர் பார்வையிட்டனர்.

பின்னர், மதுரை வேளாண்மைக் கல்லூரிப் பேராசிரியர் எம். சுந்தரம் நுண்ணுயிர் செயல்பாடு குறித்து அளித்த விளக்கம்:

பயிர்களில் பல்வேறு வகையான பாக்டீரியாக்கள் வாழ்கின்றன. அவற்றில் மெத்தைலோ பாக்டீரியம் பயிரின் இலைகள், வேர் பகுதிகளில் அதிகம் வாழ்கின்றன. இவை, பயிரில் மெத்தனால் கரிமத்தை உணவாகக் கொண்டு இலைகளின் வளர்ச்சி ஊக்கியை உற்பத்தி செய்கிறது.

இதனால், நெற்பயிர் காய்ந்துவிடாமல் 15 நாள்கள் வரை பாதுகாக்கப்படுகிறது. மேலும், பயிரின் வளர்ச்சியையும் துரிதப்படுத்துகிறது. கடந்த ஆண்டு காவிரி டெல்டா பகுதியில் சுமார் 1.5 லட்சம் ஏக்கரில் இந்த பிபிஎம் பாக்டீரியம் தெளிக்கப்பட்டது. தண்ணீர் இல்லாத நிலையில், 15 நாள்கள் வரை பயிர்கள் பசுமையாக இருந்தன.

காய்ந்துபோன பயிரில் இதைத் தெளித்ததால், 5 நாளில் மீண்டும் பச்சை நிறத்தை அடைந்தது. பெரியாறு-வைகை பாசனப் பகுதியில் தற்போதைய சூழ்நிலையில் இந்த பாக்டீரியத்தை விவசாயிகள் பயன்படுத்தவேண்டும்.

ஒரு லிட்டர் ரூ. 300 விலையில், மதுரை வேளாண்மைக் கல்லூரி நுண்ணுயிரித் துறையில் விவசாயிகள் வாங்கிக் கொள்ளலாம். ஒரு ஏக்கருக்கு 200 மில்லி பிபிஎம்.மை 200 லிட்டர் நீரில் கலந்து நெற்பயிர் நனையுமாறு ஸ்பிரேயரால்

தெளிக்கவேண்டும். ஸ்பிரேயரில் ஏதேனும் மருந்து கலந்திருந்தால், நன்கு சுத்தம் செய்த பின்னரே பயன்படுத்தவேண்டும் என்றார். முன்னதாக, மேலூர் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் எம். சரவணன் வரவேற்றார்.

**தேங்காய் நார் கழிவில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க கோரிக்கை**

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் தேங்காய் நார் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கீழக்கரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான தென்னந்தோப்புகள் உள்ளன. லட்சக்கணக்கான தேங்காய்கள் கொப்பரைக்காக இங்கிருந்து வெளி மாவட்ட மற்றும் மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

ஆனால் இதுவரை அரசு சார்பில் தென்னை தொடர்பான தொழிற்சாலைகள் இப்பகுதியில் நிறுவப்படவில்லை.

தற்போது தமிழகத்தில் 2 இடங்களில் தேங்காய் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க திட்டமிட்டிருப்பதாக மத்திய கயிறு வாரிய தலைவர் பி.பாலசந்திரன் அறிவித்துள்ளார்.

இதில் ஒரு தொழிற்சாலையை கீழக்கரை பகுதியில் அமைக்க இப்பகுதியைச் சேர்ந்த சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிக்க வேண்டும். அதுபோல் இதற்கான முயற்சியை கீழக்கரை பகுதியைச் சேர்ந்த தொழில் அதிபர்களும் எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.11.2013**

## பயிர் கடன் வழங்குவதில் தாமதப்படுத்துவதாககுறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் குற்றச்சாட்டு

திண்டுக்கல்:திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., மனோகரன் முன்னிலை வகித்தார். வேளாண்மைத்துறை இணை இயக்குனர் மனோகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சந்திரசேகர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பயிர்க்கடன் வழங்குவதில், காலதாமதப்படுத்துவதாக விவசாயிகள் குற்றம்சாட்டினர். பதில் அளித்த அதிகாரிகள், பயிர்க் கடன் வழங்க காலதாமதப்படுத்தும் கூட்டுறவு சங்க அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என்றனர்.கிராமங்களில் மணிக்கணக்கில் மின் வினியோகம் தடை செய்யப்படுவதால் விவசாயம் பாதிக்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டது. மேலும் கால்நடைத்துறையினரின் அலட்சியத்தால் நோய் பாதிப்பு அதிகரித்துள்ளது, என விவசாயிகள் குற்றம்சாட்டினர். இதற்கு பதில் அளித்து கலெக்டர், மாவட்டத்தில் 3 லட்சம் மாடுகளுக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் கோமாரி நோய் பாதிப்பு பெருமளவில் இல்லை, என்றார்.

மழைக்காக பிராத்தனை:விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகள் யாரும் கலந்து கொள்ளாததால், ஆவேசமடைந்த விவசாயிகள் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்வதாக தெரிவித்தனர். இவர்களை டி.ஆர்.ஓ., மனோகரன் சமாதானப்படுத்தினார். * மாவட்டத்தில் மட்டும் போதுமான மழை பெய்யவில்லை. இதனால் ஏற்படும் பாதிப்பினை மனதிற்கு கொண்டு, மழை பெய்யவேண்டுமென ஒரு நிமிடம் எழுந்து

நின்று பிரார்த்தனை செய்வோம், என கலெக்டர் கூறினார். அனைத்து விவசாயிகளும் எழுந்து நின்று மழைக்காக பிரார்த்தனை செய்தனர்.

### பயிர் இன்சூரன்ஸ் விவாதம் முற்றியதுவிவசாயிகள் கூட்டத்தில் சலசலப்பு:

சிவகங்கை:சிவகங்கையில்,விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நேற்று கலெக்டர் ராஜாராமன் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., தனபாலன் உட்பட பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்றனர். பயிர் இன்சூரன்ஸ் திட்ட குளறுபடியே நேற்றைய கூட்டத்தில் பிரதான விவாத பொருளாக இடம் பெற்றது. மாவட்டத்தில் 2012-13ல், 200 வருவாய் கிராமங் களுக்கு வேளாண்மைத்துறை அதிகாரிகளின் தவறான புள்ளி விவரத்தால் பயிர் இன்சூரன்ஸ் தொகை கிடைக்கவில்லை என, விவசாயிகள் தெரிவித்தனர்.

இப்பிரச்னை தொடர்ந்து 30 நிமிடத்திற்கு மேலாக நீடித்ததால், பிற கோரிக்கை குறித்து, பேச முடியாத நிலை இருந்தது. திடீரென,இந்திய கம்யூ.,வைச் சேர்ந்த ஒருவர், எழுந்து வேறு பிரச்னை குறித்து விவாதிக்க வேண்டியதால் போதும் நிறுத்துங்கள் என, விவசாயிகளை கேட்டுக்கொண்டார். ஆத்திரமடைந்த விவசாயிகள், அதிகாரிகள் சொல்லட்டும்,"" நீங்கள் சொல்ல அவசியமில்லை என்றதால் இருதரப்பிலும் வாக்குவாதம் முற்றியது.கலெக்டர் தலையிட்டு விவசாயிகளை சமரசப்படுத்தினார்.ஆனாலும், பயிர் இன்சூரன்ஸ் குளறுபடி பற்றிய பேச்சே நீடித்ததால்,வேளாண்மைத்துறை இணை இயக்குனர் தலைமையில் அதிகாரிகள் விவசாயிகளுடன் மாலை (நேற்று) கலந்தாலோசிக்க,கலெக்டர் உத்தரவிட்டார். தொடர்ந்து, நகைக்கடனுக்கு வழங்கிய வங்கிகள், கால அவகாசமின்றி உடனே மீட்க நடவடிக்கை, பயிர் கடன் கொடுக்க மறுப்பது, பெரியகண்ணனூர் கூட்டுறவு வங்கியில் பணம் கையாடல் போன்ற பல்வேறு பிரச்னை குறித்து விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

கலெக்டர் பதிலளித்து கூறுகையில், ""பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் அதிகாரிகள் தவறு செய்திருந்தால் சரிசெய்யப்படும்.பிரியம் வாங்க மறுத்தால் 90945 36748 என்ற மொபைலில் புகார் தெரிவிக்கலாம். விவசாயத்திற்காக வழங்கிய நகைக்கடனுக்கு உரிய கால அவகாசமின்றி உடனே மீட்க உத்தரவிடும் கூட்டுறவுத்துறையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

## வறட்சியால் உற்பத்தி குறைந்தது தேங்காய் விலை கிடுகிடு'''

சுரண்டை: சுரண்டையில் கடும் வறட்சி காரணமாக தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளது. விலை அதிகரித்துள்ளதால் தேங்காய்க்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சமையலில் அத்தியாவசியமாக தேவைப்படுவது தேங்காய். தேங்காய் எண்ணெய் எடுக்கவும் பயன்படுகிறது. மேலும் தற்போது கார்த்திகை மாதம் என்பதால் ஐயப்ப பக்தர்கள், முருக பக்தர்கள் இருமுடி கட்டி கோயில்களுக்கு செல்ல தேங்காய் அதிகளவில் தேவைப்படுகிறது.அதற்கு தகுந்த உற்பத்தி இல்லாமல் தென்னை மரங்கள் வறண்ட நிலையில் வாடிப்போனதால் கடந்த ஆண்டு கிலோ 12 ரூபாய்க்கு விற்ற தேங்காய், தற்போது கிலோ 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.இதனால் கடைகளில் ஒரு தேங்காய் ரூ. 10 முதல் 15 வரை விற்பனை செய்யப்படுகிறது.
தேங்காய் விலை அதிகரித்துள்ளதால் தோப்புகளில் தேங்காய் பறிக்கும் இடத்தில் நேரடியாக வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் சுரண்டை பகுதியில் தேங்காய்க்கு கடும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

## இயற்கை உரம் விற்பனையில் மோசடிநடவடிக்கைக்கு எதிர்பார்ப்பு!

ஈரோடு: ஈரோட்டில் தனியார் உர நிறுவனங்கள், ஆர்கானிக் பயோ கம்ப்போஸ்ட் எனும் பெயரில், 80 ஆயிரம் மூட்டை உரங்களை விவசாயிகளுக்கு விற்பனை செய்துள்ளது .50 கிலோ உர மூட்டையில், 8 கிலோ எடை குறைவாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.
ஈரோட்டில், கலெக்டர் சண்முகம் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்ததுகணேஷ் .ஓ.ஆர்.டி ., வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்மேட்டூர் :கூட்ட விவாதம் வருமாறு . வலதுகரை பழனிசாமிஜம்பையில் கால்நடை மருத்துவம :னை அமைக்க வேண்டும். அதிகாரிகளால் சீல் வைத்த சாயப்பட்டறைகள், முன்பக்க சீலுடன், பின் பக்கம் திறக்கப்பட்டு ஜரூராக வேலை நடக்கிறது.
அதிகாரிகள்கால்நடை : மருத்துவமனைக்கு கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதுசாயப்பட்டறைகளில் . ஆய்வு செய்து நடவடிக்கை

எடுக்கப்படும்.

தமிழக விவசாயிகள் சங்கம் பெரியசாமிகோமாரி பாதித்து இறந்த மாடுகளுக்கு :, தலா, 30 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்நெல் கொள்முதல் . நிலையங்கள் கூடுதலாக திறக்கவேண்டும்.

அதிகாரிஏற்கனவே மாவட்டத்தில் :, 16 இடங்களில் கொள்முதல் நிலையம் துவங்கி, 195 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதுதேவையான . இடங்களில் திறக்கப்படும்.

தமிழக விவசாயிகள் சங்கம் முனுசாமிகெயில் : நிறுவனம் மீண்டும் குழாய் பதிக்கும் பணியை மேற்கொள்ள, நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதுதமிழக அரசு மேல் . முறையீடு செய்து, மாற்றுவழியில் பணிகளை தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும்கோமாரி நோய் பாதித்த மாடுகளுக்கு சிகிச்சை . அளிக்க, நடமாடும் மருத்துவ குழுவை ஏற்படுத்த வேண்டும்.

அதிகாரிநோய் : கிருமிகள் மாடுகளின் இருதயத்தை நேரடியாக தாக்குவதால், சிகிச்சைக்கு பின் கூட இறக்க நேரிடலாம்ஆறு மாதத்துக்கு ஒரு முறை சிகிச்சை . பெற வே◌ண்டும்.

மேட்டூர் மேற்கு கரை விவசாயிகள் சங்கம் நடேசன்ஈரோட்டில் தனியார் : நிறுவனங்கள் ஆர்கானிக் பயோ கம்ப்போஸ்ட் எனும் பெயரில் உரங்களை தயாரித்து, 80 ஆயிரம் மூட்டைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்துள்ளனர் . 50 கிலோ மூட்டையில், 8 கிலோ எடை குறைவாக உள்ளதை அதிகாரிகள் ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர்இவை . போலியான நிறுவனங்கள் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை விவசாயிகள் சங்கம் தளபதிகொடிவேரியில் :, 12 கோடியில் கட்டப்படும் பாலத்துக்கு மாற்றாக, தடுப்பணை கட்டினால், 0.25 டி.சி.எம்., தண்ணீர் தேக்கி மிச்சப்படுத்தியும், 2 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும்.

கோத்ரேஜ், ரூச்சி உள்ளிட்ட மூன்று நிறுவனங்கள், பாமாயில் மரங்களை நட்டு, எண்ணெய் வளத்தை அதிகரிக்கும் முயற்சியாக, பாமாயில் மர கன்று ஒன்றை,

7,000 ரூபாய்க்கு ஈரோட்டில் விற்பனை செய்கின்றனர்இது அரசு . அனுமதிபெற்ற திட்டமா, கோவை மாவட்டத்தில் போலி ஆர்கானிக் பயோ கம்ப்போஸ்ட் உரங்கள் விற்பனைக்கு மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளதுஈரோட்டில் தடை . விதிக்கப்படுமா? பவானி ஆற்றின் அருகே, ஏற்கனவே மூடப்பட்ட காகித தொழிற்சாலையை திறக்க பணிகள் நடக்கிறதுபவானி ஆற்றில் தண்ணீர் எடுக் .க தடையும், சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை வேண்டும்.
கலெக்டர்இயற்கை : உரங்களை விற்பனை செய்ய அனுமதிபெற தேவையில்லை . போலியானதா, எடை குறைவாக உள்ளதா என்பது குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பார்கள். விவசாயிகள் உரங்களை வாங்கும் முன், வேளாண் அதிகாரிகளுடன் ஆலோசிக்க வேண்டும்.

## கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு நிவாரணம் :குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் "கோரஸ்'

திருச்சி: "கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்த மாடுகளுக்கு, எவ்வித நிபந்தனையும் இன்றி நிவாரணம் வழங்க வேண்டும்' என்பதை வலியுறுத்தி, குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கலெக்டருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.
திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நேற்று காலை கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்தது. கூட்டத்தில் கலெக்டர் ஜெயஸ்ரீ, டி.ஆர்.ஓ., தர்ப்பகராஜ், கால்நடைத்துறை இணை இயக்குனர் டாக்டர் சின்னதுரை, கூட்டுறவுத்துறை இணை பதிவாளர் ராஜேந்திரபிரசாத், வேளாண் துறை துணை இயக்குனர் சந்திரசேகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சந்திரசேகர், கலெக்டர் உதவியாளர் பாண்டியராஜன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் தியாகராஜன் உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.
கூட்டம் துவங்கியதும், முன்வரிசையில் உட்கார்ந்திருந்த விவசாய சங்க பிரதிநிதிகள் சிவசூரியன், புலியூர் நாகராஜன், அய்யாக்கண்ணு, விசுவநாதன் ஆகியோர் எழுந்து, ""கோமாரி நோயை தடுக்க போதிய நடவடிக்கை எடுக்க கால்நடைத்துறை தவறி விட்டது. நோயினால் இறந்த மாடுகள் குறித்து பதிவு செய்ய அதிகாரிகள் மறுக்கின்றனர். ஆகையால் மாவட்டம் முழுவதும் உரிய

முறையில் கணக்கெடுப்பு நடத்தி, கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு, எவ்வித நிபந்தனையுமின்றி நிவாரணம் வழங்கவேண்டும்," என்று கூறினர்.

இதைக்கேட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ, ""உங்களின் குற்றச்சாட்டுக்கு கால்நடைத்துறை துணை இயக்குனர் பதில் கூறுவார். அவர் கூறும் பதிலில் தவறு இருந்தால் சுட்டிகாட்டுங்கள், அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்," என்று கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து விவசாயிகள் அமைதியாயினர். கூட்டத்தில் கால்நடைத்துறை இணை இயக்குனர் டாக்டர் சின்னதுரை விளக்கம் அளித்து பேசியதாவது:

கோமாரி நோய் தடுப்பூசி, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வழக்கமாக கால்நடைகளுக்கு போடப்பட்டு வருகிறது. கடந்த, செப்டம்பர், 15ம் தேதி முதல், அக்டோபர், 10ம் தேதி வரை, திருச்சி மாவட்டத்தில் உள்ள, 3.25 லட்சம் கால்நடைகளில், 3.10 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. தவிர கிராமந்தோறும் கால்நடை மருத்துவர் அடங்கிய குழுக்கள் அமைத்து, கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாவட்டம் முழுவதும், 100 கால்நடை டாக்டர்கள், 75 கால்நடை ஆய்வாளர்கள், 100 பராமரிப்பாளர்கள், கோமாரி நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டனர். கிராமந்தோறும் கூட்டங்கள் நடத்தியும் கோமாரி நோய் தடுப்பு பற்றிய விழிப்புணர்வும், தடுப்பூசி விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

திருச்சி மாவட்டத்தில், 167 கிராமங்களில், 3,378 மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டு, தக்க சிகிச்சை மூலம், 3,335 மாடுகள் குணமடைந்துள்ளது.

கோமாரி நோய் தடுப்பூசிக்கான மருந்து பற்றாக்குறை ஏற்பட்டபோது, விருதுநகர் மாவட்டத்திலிருந்து, 7,200 குப்பி மருந்துகள் வாங்கி, கால்நடைகளுக்கு போடப்பட்டது. கோமாரி நோய் தாக்கிய கால்நடைகளுக்கு தடுப்பூசி போடக்கூடாது. அந்த கால்நடைகளுக்கு நோய்க்கான சிகிச்சை தான் அளிக்கவேண்டும்.

கோமாரி நோய் தாக்குதல் இருப்பது தெரிந்தால், 94450-01116, 94450-32580, 89035-11330 என்ற மொபைல் எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

மொத்தத்தில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், அனைத்து விவசாய சங்க பிரதிநிதிகளும், விவசாயிகளும், ஒருமித்த குரலில், கோமாரி

நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை, நோயால் இறந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று, ஒட்டுமொத்த குரலில் கலெக்டரிடம் கோரிக்கை விடுத்தனர்.

## கால்நடை வளர்க்க உரிமம் கட்டாயம் திருச்சி மாநகராட்சி அதிரடி அறிவிப்பு

திருச்சிதிருச்சி மாநகர பகுதிகளில் உரிமம் பெற்றவர்கள் மட்டுமே கால்நடைகள் "" : வளர்க்க முடியும்," என, மாநகராட்சி அறிவித்துள்ளது.

திருச்சி மாநகராட்சி கமிஷனர் தண்டபாணி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு பொது சுகாதார சட்டம், திருச்சி மாநகராட்சி சட்டம், விலங்குகள் மற்றும் பறவைகள் சட்டம் ஆகியவற்றின் படி, திருச்சி மாநகராட்சியில் கால்நடைகள் பராமரிப்பு, கட்டுப்பாடுகள், வளர்க்கும் இடங்கள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதில், உரிம கட்டணம், அபராத கட்டணங்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது . இதன் விவரங்கள் திருச்சி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதுஇதன் . நகல் திருச்சி மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் அதற்கான கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

திருச்சி மாநகராட்சி நிர்வாகம் அனுமதித்த இடங்கள் தவிர, இதர இடங்களில் மாடுகள், ஆடுகள், கழுதைகள் வளர்க்க கூடாது. கால்நடைகளை பாதுகாவலர் இன்றி சாலைகளில் அலைய விடக்கூடாதுஅலையவிட்டால் ., அந்த கால்நடைகள் மாநகராட்சியால் பிடிக்கப்பட்டு பொது ஏலம் விடப்படும். மாநகராட்சி எல்லைக்குள் பன்றி, குதிரைகள் வளர்க்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகள் வளர்ப்போர் 14 நாளுக்குள் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மாநகராட்சி உரிமம் பெற்று மட்டுமே கால்நடைகளை வளர்க்க வேண்டும் . பன்றி .கால்நடைகள் சாலைகளில் சுற்றி திரிய விடக் கூடாது, குதிரைகளை மாநகராட்சி எல்லையில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

## கோரிக்கை நிறைவேற்றக்கோரி விவசாயிகள் முற்றுகை : பதிலில் திருப்தி இல்லாததால் வெளிநடப்பு

கரூர்கரூரில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் :, விவசாய சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கலெக்டர் ஜெயந்தியை முற்றுகையிட்டனர். அதிகாரிகள் பதில் திருப்தி அளிக்காததால், விவசாயிகள் வெளிநடப்பு செய்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நேற்று காலை, 11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் துவங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால், கரூர் மாவட்டத்தில் உள்ள கூட்ட அரங்கில், ஏராளமான விவசாயிகள் காத்திருந்தனர்சில விவசாயிகள் உட்கார சேர் இல்லாமல் நின்று . கொண்டிருந்தனர்காலை ., 10.50 மணிக்கு டி.ஓ.ஆர்., அருணாவுடன் வந்த, கலெக்டர் ஜெயந்தி, கூட்ட அரங்கில் விவசாயிகள் அதிகளவில் இருப்பதை பார்த்து விட்டு, அவரது அறைக்கு திரும்பிச் சென்றார்.

சிறிது நேரத்துக்கு பிறகு, பசுபதிபாளையம் போலீஸ் எஸ்.ஐ., பிரித்திவிராஜ் உள்ளிட்ட போலீஸார் பாதுகாப்புடன், காலை, 11.15 மணிக்கு கலெக்டர் ஜெயந்தி, டி.ஓ.ஆர்., அருணா ஆகியோர், விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு வந்தனர்.

அப்போது, கரூர் மாவட்ட நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி, செயலாளர் ராமலிங்கம் உள்ளிட்ட விவசாயிகள், கலெக்டர் ஜெயந்தியை முற்றுகையிட்டனர்.

""கரூரில் தொடர்ந்து அமராவதி ஆற்றின் கிளை வாய்க் காலில் சாயக்கழிவு ஓடுகிறதுசாயக்கழிவை . ஃபோட்டோ எடுக்க சென்றால், சாயப்பட்டரை உரிமையாளர்கள் புகாரின் பேரில், போலீஸார் எங்கள் மீது வழக்குப்பதிவு செய்கின்றனர்மாசுக்கட்டுப்பாடு வாரிய . அதிகாரிகள், சாயப்பட்டரை உரிமையாளர்களுக்கு சாதகமாக நடந்து கொள்கின்றனர்" என்று விவசாயிகள் கூறினர்.

அப்போது, பள்ளப்பாளையம் ராஜவாய்க்கால் பாசன விவசாயிகள் சங்க தலை வர் பழனிசாமி உள்ளிட்ட விவசாயிகளும், கலெக்டர் ஜெயந்தியை முற்றுகையிட்டு, ""அமராவதி ஆற்றில் இருந்து, கரூர் மாவட்ட பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றனர்.

இரு சங்கங்களைச் சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், கலெக்டர் ஜெயந்தியை முற்றுகையிட்டு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசியதால், கூட்ட அரங்கில் கூச்சலும், குழப்பமாக இருந்தது.

அப்போது, கலெக்டர் ஜெயந்தி, விவசாயிகள் கோரிக்கைகள் தொடர்பாக, மாசுகட்டுபாடு வாரிய அதிகாரிகள், பொதுப்பணி துறை அதிகாரிகள் ஆகியோரை அழைத்து விளக்கம் கேட்டார். பிறகு, உரிய நடவடிக்கை எடுப்பதாக, கலெக்டர் ஜெயந்தி விவசாயிகளிடம் தெரிவித்தார்.

ஆனால், கரூர் மாசுகட்டுபாடு வாரிய அதிகாரிகள் மற்றும் பொதுப்பணி துறை அதிகாரிகள் அளித்த விளக்கத்தில் திருப்தி இல்லை என கூறி, நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கத்தினர், பள்ளப்பாளையம் ராஜ வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கூட்ட அரங்கில் இருந்து நேற்று மதியம் 12 மணிக்கு வெளிநடப்பு செய்தனர்.

இதனால், கூட்ட அரங்கில் ஏராளமான சேர்கள் காலியாக இருந்ததுகுறைந்த . அளவிலேயே விவசாயிகள் கூட்ட அரங்கில் இருந்தனர்தொடர்ந்து ., விவசாயிகள் குறைதீர் கூட்டம் துவங்கியதுவிவசாயிகள். கலெக்டர் ஜெயந்தியை முற்றுகையிட்டு, கோரிக்கை களை வலியுறுத்தியதால், 45 நிமிடம் கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## வயலில் தண்ணீர் தெளிக்கும் பரிதாபம் வாடும் பயிரைக் காப்பாற்ற போராட்டம்

புதுக்கோட்டை: புதுக்கோட்டை அருகே வாசல் முன் தண்ணீர் தெளிப்பதுபோல் வறட்சியினால் வாடி வதங்கிவரும் நெற்பயிரை காப்பாற்றுவதற்காக வயல்வெளிகளில் தண்ணீர் தெளிக்கின்ற பரிதாப நிலைக்கு விவசாய

குடும்பத்தினர் தள்ளப்பட்டுள்ளனர்.
புதுக்கோட்டை மாவட்டம் டெல்டா பகுதிகுட்பட்டது என்றாலும் குறிப்பிட்ட சில பகுதிகள் மட்டுமே காவிரி மூலம் பாசனவசதி பெற்றுவருகிறது. இதர பகுதிகளில் மழை பெய்தால் மட்டுமே விவசாயம் செய்ய முடியும் என்கின்ற நிலைதான் உள்ளது.
அம்மாவட்டத்தை பொறுத்தப்பட்டில் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழையை நம்பி இருபோகம் நெல் சாகுபடி செய்வது வழக்கம். கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை பெய்யத் தவறியதால் நெல் சாகுபடி அடியோடு முடங்கியுள்ளது. நிலத்தடி நீர் மாயமானதாலும், மின் தடையினாலும் பம்புசெட் பாசனமும் விவசாயிகளுக்கு பயனளிக்கவில்லை.
இருந்தும் கடைகளில் விலைகொடுத்து அரிசி வாங்கி சமைக்க விரும்பாத விவசாயிகள் சிலர், வீடுகளின் அருகில் உள்ள விவசாய நிலங்களில் நெல் சாகுபடி செய்துள்ளனர். இவ்வாறு சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் கதிர்கள் வெளிவரும் நிலையில் தண்ணீர் இன்றி வாடி வதங்கிவருகிறது.
இப்பயிர்களை காப்பாற்றுவதற்காக விவசாயிகள் குறிப்பாக, பெண்கள் வாசல் முன் தண்ணீர் தெளிப்பது போல் வாளிகளில் தண்ணீர் பிடித்துவந்து வயல்வெளிகளில் தெளித்து வருகின்றனர்.
மாலையீடு, பூசத்துறை, கவிநாடு மேற்கு, அம்மாசத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் வாடிய பயிரை காப்பாற்றுவதற்காக வயல்வெளிகளில் தண்ணீர் தெளிப்பது விவசாயிகளுக்கு அன்றாட நிகழ்வாகிவிட்டது.
இதற்கும் வாய்ப்பில்லாத பகுதிகளில் மழையை எதிர்பார்த்து சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் அனைத்தும் தண்ணீர் இன்றி வாடி வதங்கியும், கருகியும் வருகிறது. அதிகாலையில் எழுந்து வயல்வெளிக்கு வரும் விவசாயிகள் கருகிவரும் நெற்பயிர்களை பார்த்து கண்ணீர் வடிக்கின்ற பரிதாத நிலை தொடர்கிறது.
புதுக்கோட்டை மாவட்ட விவசாய பணிகளுக்காக கொள்ளிடம் உபரிநீர் திட்டம் அல்லது காவரி - குண்டாறு இணைப்பு திட்டம் செயல்படுத்தவேண்டும் என மத்திய, மாநில அரசுகளை அம்மாவட்ட விவசாயிகள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றனர்.
ஒவ்வொரு தேர்தலின்போதும் கொள்ளிடம் உபரிநீர் திட்டம் அல்லது காவிரி - குண்டாறு இணைப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என விவசாயிகளிடம் வாக்குறுதி அளிப்பதை அம்மாவட்ட அரசியல் கட்சியினர் வழக்கமாக கொண்டுள்ளனர்.
தேர்தலுக்கு பின் வாக்குறுதியை நிறைவேற்ற அவர்கள் முன்வருவதில்லை. அலுத்துபோன விவசாயிகள் தற்போது இந்த இருதிட்டங்களுக்காக அரசியல்

கட்சியினரை அண்டுவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். இதற்கு பதில் அதிகாரிகளிடம் முறையிட்டு வருகின்றனர்.
ஒவ்வொரு மாதமும் நடைபெறும் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கொள்ளிடம் உபரி நீர் திட்டம் மற்றும் காவிரி - குண்டாறு இணைப்பு திட்டத்தை செயல்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை விவசாயிகள் முன்வைத்து வருகின்றனர்.

## கோமாரி நோய் தாக்கிய கிராமத்தில் கால்நடைத்துறை இயக்குனர் ஆய்வு

கந்தர்வக்கோட்டைபுதுகை மாவட்டம் :, கந்தர்வக்கோட்டை பகுதியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வேகமாக பரவி வருகிறதுஆனால் போதிய . அளவில் தடுப்பு நடவடிக்கைகளை கால்நடைத்துறை அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை என, அப்பகுதி விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர் . இந்நிலையில், கந்தர்வக்கோட்டை அடுத்துள்ள மட்டாங்காடு கிராமத்தில், விவசாயி முத்துவேல் என்பவரின் பசு மாடும், கன்றுக்குட்டியும் கோமாரி நோயால் இறந்ததுமேலும் இதே கிராமத்தைச் . சேர்ந்த விவசாயி காளிமுத்து என்பவருக்கு சொந்தமான மாடும், கன்றும் நோய்க்கு திடீரென பலியானது.

இதுகுறித்து தகவல் வெளியானதையடுத்து, கால்நடைத்துறை மாநில இயக்குனர் பழனிச்சாமி, புதுகை கலெக்டர் மனோகரன், தாசில்தார் கமலக்கண்ணன் ஆகியோர், நேற்றுக்காலை, 11 மணிக்கு மட்டாங்கால் கிராமத்தில் ஆய்வு நடத்தினர் .இதைத்தொடர்ந்து, கால்நடை வளர்ப்போர், விவசாயிகளிடம் கோமாரிநோய் தடுப்பு நடவடிக்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் அரவம்பட்டி, கோமாரிபுரம், சவேரியர்பட்டி உள்ளிட்ட பகுதிகளிலுள்ள கிராமங்களிலும், கால்நடைத்துறை அதிகாரிகள், அலுவலர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## கோமாரி நோய் பாதித்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்

விழுப்புரம் : விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடந்தது.
கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். குறைகேட்பு கூட்டத்தில் விவசாயிகள்

கேட்கும் கேள்விகளுக்கு அங்கேயே அதிகாரிகள் பதில் கூற வேண்டும். கொடுக்கப்படும் மனுக்களில், சில மனுக்கள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கின்றனர்.
கோமாரி நோய் பாதித்த கால்நடைகளுக்கு
காப்பீடு வழங்குவதோடு, நிவாரணமும் வழங்க வேண்டும். மாடுகளுக்கு உள் ளதை போன்று, ஆடுகளுக்கும் காப்பீடு முறை கொண்டு வரவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாயிகள்
கூறினர்.
முன்னதாக, பட்டு வளர்ச்சி துறையின் மூலம் பட்டு மல்பரி நடவு செய்த 31 விவசாயிகளுக்கு 1 லட்சத்து 29 ஆயிரத்து 125 ரூபாய் காசோலையாக மானியத்தொகையும், மாவட்டத்தில் 24 பேருக்கு சிறந்த விவசாயிகளுக்கான பரிசுத் தொகை 80 ஆயிரம் ரூபாய் காசோலையை கலெக்டர் சம்பத் வழங்கினார். மாவட்ட திட்ட இயக்குனர் முத்துமீனாள், வேளாண்மை இணை இயக்குனர் சக்கரவர்த்தி, தோட்டக் கலை துறை உதவி இயக்குனர் ராஜி, மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர்கள் ராசு, சிவராசு, நீர் ஆதார அமைப்பு செயற்பொறியாளர் ஜெயராமன் கலந்து கொண்டனர்.

## கோமாரியால் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு தர்மபுரி மாவட்ட விவசாயிகள் : கோரிக்கை

தர்மபுரிகோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு" :, தலா, 25 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
தர்மபுரி கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், டி.ஆர்.ஓ., ராமர் தலைமையில், நேற்று, விவசாயிகள் குறைத்தீர்க்கும் கூட்டம் நடந்தது.
கூட்டத்தில் நடந்த விவாதம் பின்வருமாறு:
சின்னச்சாமி (தமிழக விவசாய சங்க மாநில தலைவர்:( தர்மபுரி மாவட்டத்தில், கோமாரி நோயால் ஏராளமான கால்நடைகள் இறந்துள்ளதுஇதனால் ., விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர், கடுமையாக பாதிக்கப்பட்டு, இழப்பில் இருந்து மீள முடியமால் தவித்து வருகின்றனர்.
எனவே, மாவட்ட நிர்வாகம், கோமாரி நோயால் இறந்த கால்நடைகளின்

உரிமையாளர்களுக்கு, கால்நடை ஒன்றுக்கு, 25 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்.டி.ஓ.ஆர்., ராமர்மாவட்டத்தில் :, கோமாரி நோயை கட்டுப்படுத்த, தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்தது எடுக்கப்பட்டு வருகிறது. இதனால், இறந்த கால்நடைகளுக்கு, இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை, அரசின் கவனத்துக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.
சுப்பிரமணி (விவசாயிதர்மபுரி மாவட்டத்தில் :(, அதிகளவில் கால்நடைகள் உள்ளனதற்போது ., மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கோமாரி நோயால், ஏராளமான கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளதுவிவசாயிகள் மற்றும் கால்நடை .
வளர்ப்போரின் நலன் கருதி, தர்மபுரி மாவட்டத்தில், கோமாரி நோய் தடுப்பு ஆய்வகம் அமைக்க வேண்டும்.டி.ஓ.ஆர்., ராமர்கோமாரி நோயை கட்டுப்படுத்த :, மாவட்டத்தில் உள்ள, அனைத்து பஞ்சாயத்துகளிலும் உள்ள கால்நடைகளை, கால்நடை மருத்துவர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதுடன், கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர் .
தர்மபுரி மாவட்டத்தில், கோமாரி உள்ளிட்ட, நோய் தடுப்பு ஆய்வகம் அமைக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை, அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.திருப்பதி தர்மபுரி :(விவசாயி) மாவட்டத்தில், மரவள்ளி கிழங்கு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, மரவள்ளி கிழங்கிற்கு உரிய விலை கிடைக்காததால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படும் நிலை உள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம், மரவள்ளி கிழங்கிற்கு கட்டுப்படியான விலை, ஆண்டு தோறும் நிர்ணயம் செய்ய வேண்டும்.டி.ஓ.ஆர்., ராமர்மரவள்ளி கிழங்கு : விவசாயிகள் மற்றும் வியாபாரிகள், சேகோ ஆலை உரிமையளர்களுடன், மரவள்ளி கிழங்குக்கு உரிய விலை கிடைக்க, கூட்டம் விரைவில் ஏற்பாடு செய்யப்படும்இதில் ., விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு விவாதம் நடந்தது.வேளாண் இணை இயக்குனர் மனோகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் கலைச்செல்வி, செயற்பொறியாளர் முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 26.11.2013

### மானாவாரி உளுந்து சாகுபடியில் நல்ல லாபம் கிடைக்கும்

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை வட்டாரத்திற்கு உட்பட்ட பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிற்கு மேல் மானாவாரி சாகுபடியாக உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. இதனை நேற்று விழுப்புரம் மாவட்ட விதைசான்று உதவி இயக்குனர் வேலாயுதம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறுகையில், விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது சுமார் 1 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு மேல் மானா வாரி சாகுபடியாக உளுந்து பயிரினை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். வம்பன் 4 மற்றும் வம்பன் 5 ரக விதை யினை தேசிய உணவு பாது காப்பு திட்டம் மற்றும் வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானியவிலையில் விதைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் தரமான உளுந் தினை வேளாண்மை துறையின் சார்பில் நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளப்படுகிறது. தற்போது பயிரிடப்பட்டுள்ள உளுந்து ஒரு ஏக்கருக்கு சுமார் 600 கிலோ வரையில் மகசூல் கிடைக்கும் நிலையில் உள்ளது.

இந்த ஆண்டு கூடுதல் மகசூல் கிடைக்கும் நிலை உள்ளதால் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். மேலும் உளுந்து கொள்முதல் செய்யும் போது 30 சதவிகிதம் கூடு தல் விலை வழங்கப்படுகிறது.

விதைத்த 25வது நாளில் பூ வைத்து 30 நாளில் காய்க்கும் தன்மை கொண்ட வம்பன் ரக உளுந்து பயிரினை போதிய பயிர் பாதுகாப்பு செய்தால் விவசாயிகள் நல்ல பலன் அடைய வாய்ப்பு உள்ளது என்றார்.

ஆய்வின் போது விதை சான்று அலுவலர் மலர்க்கொடி, விரிவாக்க அலுவலர் காமராஜ், மணி உள்ளிட்டவர்கள் இருந்தனர்.

### கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாய தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

உளுந்தூர்பேட்டை, : அனைத்திந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் விழுப்புரம் மாவட்டத்தில் செங்கல் சூளை, கரும்புவெட்டுதல், கல்குவாரிகளில் கொத்தடிமைக்கு உட்படுத்துபவர் கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலவச மிக்சி, கிரைண்டர், மின் விசிறி உடனடியாக வழங்க வேண்டும். திருநாவலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவர் கள் பற்றாக்குறையை போக்க வேண்டும். இரவு நேரத்தில் வரும் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். ஏழை குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு வீட்டு மனை, மருத்துவம், கல்வி உள்ளிட்ட அடிப் படை வசதிகளை செய்து தரவேண்டும் உள்ளிட்ட கோரிக்கையினை வலியுறுத்தி உளுந்தூர்பேட்டை அடுத்த திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத் துக்கு மாவட்ட அமைப் பாளர் கலியமூர்த்தி தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் கேசவன், நாகமணி, சுப்ரமணியன், சரவணன், வேலு, அன்பு ஆகி யோர் முன்னிலை வகித்தனர். மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் மாவட்ட செய லாளர் வெங்கடேசன் கோரிக்கையினை வலியுறுத்தி பேசினார். இதில் கந்தசாமி, ஏழுமலை, சின்ன துரை உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**நோய்கள் தாக்குதலால் நடவுப்பயிர் அதிகளவு சேதம் பூச்சிமருந்து கடைகளுக்கு படையெடுக்கும் விவசாயிகள்**

திருவெறும்பூர், : திருச்சி பகுதியில் நடவுப்பயிர்களை நோய்கள் தாக்கி வருவதால் பூச்சிமருந்து கடைகள், பூச்சிமருந்து தெளிப்பான் கடைகளை நோக்கி விவசாயிகள் படையெடுத்து வருகின்றனர்.மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பகுதி பாசனத்திற்காக ஜூன் 12ம் தேதி தமிழக அரசு தண்ணீர் திறந்து விடுவது வழக்கம். அதை கொண்டு விவசாயிகள் தங்களது நடவுப்பணிகளை துவங்குவார்கள். குறுவை நடவு செய்து அறுவடை செய்தபின் சம்பா நடவு செய்வார்கள். மேட்டூர் அணை ஜனவரி 28ம் தேதி மூடப்படுவது வழக்கம். இதனால் தை மாதம் விவசாயிகள் கோடை பயிர்களான உளுந்து, பச்சைப்பயிரை பயிரிடுவர்.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக கர்நாடக அரசு, தமிழகத்திற்கு உரிய தண்ணீரை கொடுக்க மறுத்து வருவதாலும், மழை பொய்த்துபோனதாலும் மேட்டூர்

அணையில் போதிய தண்ணீர் இருப்பதில்லை. இதனால் குறித்த நேரத்தில் ஜுன் 12ம் தேதிமேட்டூர் அணையை திறக்க முடிவதில்லை. இதனால் காவிரி டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி செய்ய முடிவதில்லை. போர்வெல் மின்சார மோட்டார் வைத்திருக்கும் ஒரு சில விவசாயிகள் மட்டுமே விவசாயம் செய்து வருகின்றனர். அதிலும் பிரச்னை உள்ளது. அறுவடை நேரங்களில் வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இதனால் இயந்திரம் உதவியுடன் தான் அறுவடை செய்ய வேண்டிய நிலை வருகிறது. அப்படியே இயந்திரம் உதவியுடன் அறுவடை செய்வதால் நஷ்டம் தான் ஏற்படும். வயலில் நெல் மணிகள் சிந்தும். மாடுகளுக்கு தீவனமாக பயன்படும் வைக்கோல் கிடைக்காது.

மூன்றுபோகம் சாகுபடி செய்த காலம்போய் ஒரு போகம் சாகுபடி செய்தால் போதும் என்ற நிலை உருவாகிவிட்டது. அந்த ஒருபோக நடவுக்கும் போதிய தண்ணீர் கடைசி வரை கிடைப்பதில்லை. கடந்தாண்டு ஒருபோக நடவுப்பயிரை காப்பாற்ற முடியாமல் போனது. இந்நிலையில் இந்த ஆண்டும் மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் குறித்த நேரத்தில் காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்க முடியவில்லை. இதனால் குறுவை சாகுபடி செய்ய முடியவில்லை. இந்நிலையில் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீரை கொண்டு டெல்டா பகுதியில் ஒருபோக சம்பா சாகுபடி நடந்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் அப்படி நடவு செய்துள்ள நெற்பயிர்களை நட்ட சில நாட்களிலேயே குறுத்துப்பூச்சி தாக்கியது.

ஒரு வழியாக பூச்சிமருந்துகளை அடித்து குறுத்துபூச்சி தாக்குதலில் இருந்து ஓரளவு விவசாயிகள் கட்டுப்படுத்தினர். இதைதொடர்ந்து நெற்பயிர்களை இலை சுருட்டுப்புழு தாக்கியது. தற்போது செந்தாலைநோய் நடவுப்பயிரை தாக்கி வருகிறது. நடவுப்பயிர் கதிர் வாங்கும் நேரத்தில் இந்த பூச்சி தாக்கியுள்ளது. இப்படி அடுத்தடுத்து பூச்சிகள் தாக்குவதால் நடவுப்பயிரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று நகைகளை அடகு வைத்தும், கடன் வாங்கியும் பூச்சிமருந்து கடைகள் மற்றும் பூச்சிமருந்து தெளிப்பான் கடைகளை நோக்கி விவசாயிகள் படையெடுத்து வருகின்றனர். இதனால் பூச்சிமருந்து கடை, பூச்சிமருந்து தெளிப்பான் கடைகளில் விவசாயிகளின் கூட்டம் நிரம்பி வழிகிறது.

மேலும் நெற்பயிர் கதிர் வாங்கும்போது குறுத்துப்பூச்சி, புகையான் கொலைநோய்

என பல நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.இதுபற்றி பனையபுரத்தை சேர்ந்த விவசாயி நாககண்ணு கூறியது, இந்தாண்டு அடுத்தடுத்து நடவுப்பயிரை பூச்சிகள் தாக்கி வருகிறது. பூச்சி மருந்தே அடிக்காமல் விவசாயம் செய்ய வேண்டுமென நாங்கள் நினைத்தாலும் இயற்கை விடுவதில்லை. தண்ணீர் இல்லாமல் நடவுப்பயிர்கள் காய்கிறது. ஸ்ரீரங்கம் மேலூரிலிருந்து காவிரி ஆற்றில் இருந்து பிரிந்து வரும் நாட்டுவாய்க்கால் மூலம் தான் கல்லணை நடுகரை பகுதி ஊர்கள் பாசன வசதி பெற்று வருகிறது. எங்களின் நீண்டநாள் கோரிக்கையான ஸ்ரீரங்கம் நாட்டுவாய்க்காலை முக்கொம்பில் இணைத்தால் மேட்டூர் அணை தேக்கினாலும் பாசனத்திற்கு வாய்க்காலில் தண்ணீர் வரும். இதை தமிழக அரசு நிறைவேற்றி கொடுக்க வேண்டும் என்றார். தரமற்ற கைத்தெளிப்பான்கடந்த சில ஆண்டுகளாக அரசு மானியத்தில் வழங்கிய கைத்தெளிப்பான்கள் மிகவும் தரமற்றதாக இருந்தது. அதனால் விவசாயிகள் அந்த கைத்தெளிப்பானை ஓராண்டுக்கு கூட பயன்படுத்த முடியாமல் போனது. எனவே அரசு மானியத்தில் வழங்கும் கைத்தெளிப்பானை தரமானதாக வழங்க வேண்டும். மேலும் அதை விவசாயிகளுக்கு தேவைப்படும் நேரத்தில் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

**அரியலூர் மாவட்டத்தில் பரவலாக மழை உழவுப் பணிகளில் விவசாயிகள் மும்முரம் அரசும் கை கொடுக்க கோரிக்கை**

அரியலூர்:அரியலூர் மாவட்டத்தில் தற்போது ஆங்காங்கே மழை பெய்து வருவதால் விவசாயிகள், விவசாய பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். எனினும் விவசாயிகள் பணிகளை செம்மையாக செய்யும் வகையில் அரசும் தேவையான உதவிகளை செய்து தர வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.  அரியலூர் மாவட்டத்தில் கடந்தாண்டு பருவமழை பொய்த்ததால், ஏரிகள் நீர் வரத்தின்றி வறண்டது. இதனால் விவசாயம் பொய்த்துப் போனது. ஆனால் இந்தாண்டு ஒரளவு மழை பெய்ததா லும், ஏரிகளுக்கு ஓரளவு தண்ணீர் வந்துள்ளதாலும் மாவட்டம் முழு வதும் விவசாய பணிகள்
தீவிரமாக நடந்து வருகிறது. ஆனால் ஆங்காங்கே நடந்து வரும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் காரணமாக விவசாய பணிகளுக்கு ஆள்

கிடைக்காத நிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு, விவசாய பணிகளுக்காக வெளியூர்களில் இருந்து ஆட்கள் கொண்டு வர வேண்டியுள்ளதால், செலவுகளும் அதிகரித்துள்ளது.

இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தற்போது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழையை மட்டுமே நம்பி பருத்தி, மக்காசோளம் போன்ற மானாவாரி பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். கடந்த காலங் களை விட இந்தாண்டு உழவு கூலி, ஆள் கூலி, விதை, பயிர் ஆகியவற்றின் விலை உயர்வு விவசாயிகளை மேலும் கவலை கொள்ள வைத்துள்ளது.

மாவட்டத்தில் செந்துறை சுற்று வட்டார பகுதிகளான ராயம்புரம், பொய்யாதநல்லூர், பொட்ட வெளி, குழூமூர் பகுதிகளில் உழவு ஓட்ட டிராக்டருக்கு ஒரு மணி நேரத்திற்கு கடந்தாண்டு ரூ.700 ஆனது. தற்போது இது ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. ஏர் மாட்டுக்கு கடந்தாண்டு ரூ.1000மும், இந்தாண்டு ரூ.1300ம்ஆகிறது. விதைப்பு கூலி கடந்தாண்டு ரூ.200ஆக இருந்தது. இந்தாண்டு ரூ.250 ஆகவும், விதை விலையும் அதிகரித்துள்ளது.

உரம், பூச்சி கொல்லி மருந்து, களையெடுப்பு என உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், விவசாயிகளுக்கு செலவு செய்யும் அளவுக்கு லாபம் கிடைக்குமா என்ற கவலையும் மேலோங்கி உள்ளது.

இருப்பினும் பாரம்பரிய தொழிலான விவசாயத்தை விவசாயிகள் கைவிட முடியாத நிலையில், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து தர வேண்டும் என அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மழை இல்லாததால் கைவிடப்பட்ட விவசாயம் செங்கல் தயாரிப்பில் விவசாய தொழிலாளர்கள்**

மானாமதுரை, : பருவமழை ஏமாற்றியதால் விவசாயத்தை கைவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயத்தை நம்பியிருந்த விவசாயக்கூலிகள் வேறுவழியின்றி செங்கல், விறகுகரி தயாரிப்பு தொழிலுக்கு திரும்பியுள்ளனர். சிவகங்கை மாவட்டத்தில் சராசரியாக 93 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இந்தாண்டு மழையை நம்பி நேரடி விதைப்பு, நாற்றுநடவு மூலம் நெல் சாகுபடியில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பருவமழை

ஏமாற்றியது பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வயல்களில் உழுவுப்பணி, நாற்று நடவு, களை எடுத் தல், உரமிடுதல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான விவசாயக்கூலி தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். இதனால் கடந்த சில வாரங்களாக வேலையின்றி தவித்த விவசாயக்கூலிகள் தாங்கள் ஏற்கனவே வேலை செய்த செங்கல் காளவாசல், விறகுக்கரி உற்பத்தி செய்யும் இடங்களுக்கு வேலைக்கு திரும்பியுள்ளனர் மானாமதுரை, திருப்புவனம், திருப்புத்தூர், காரைக்குடி, சிங்கம்புணரி உள்ளிட்ட பகுதிகளில் காளவாசல், சேம்பர்கள் ஏராளமாக உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மானாமதுரையில் தான் இருக்கின்றன. இதுதவிர பரமக்குடி அருகே மஞ்சூரிலும் செங்கல் சேம்பர்கள், காளவாசல்கள் உள்ளன. சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான கட்டுமானத்தேவைக்கு இங்கிருந்து உற்பத்தி செய்யப்படும் செங்கல்தான் அனுப்பப்படுகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் வரை மழை பெய்ததால் இங்கு வேலை செய்த பலரும் விவசாயப்பணிகளுக்கு சென்றனர். விவசாயப்பணிகள் நடக்கும் ஜனவரி மாதம் வரை செங்கல் தயாரிப்பு பணிகள் மந்தமாகவே இருக்கும். இந்தாண்டு எதிர்பார்த்த மழை இல்லாததால் விவசாயப்பணிக்கு சென்ற பலரும் மீண்டும் பணிக்கு திரும்பி வருகின்றனர். இதுகுறித்து விவசாயத்தொழிலாளர் அழகர் கூறுகையில், பருவமழை தொடங்கும் காலம் முதல் 3 மாத காலத்துக்கு செங்கல் காளவாசல், விறகுக்கரி உற்பத்தியாகும் இடங்களுக்கு போகாமல் விவசாயப்பணிகளில் ஈடுபடுவது வழக்கம். ஆண்டுக்கு ஒருமுறை விவசாயப்பணிகளில் ஈடுபட்டு அதில் கிடைக்கும் நெல்லை சாப்பாட்டு தேவைக்கு பயன்படுத்திக்கொள்வோம். இந்தாண்டு மழை பொய்த்துபோனதால் விவசாயவேலைகள் கிடைக்கவில்லை. வேறுவழியின்றி மீண்டும் காளவாசலுக்கு வந்துவிட்டோம் என்றார்.

## கோமாரி நோய் வராமல் தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி அவசியம்

ஈரோடு, : ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் யசோதை, உதவி பேராசிரியர்கள் கிருபாகரன், கவிதா ஆகியோர் தெரிவித்துள்ளதாவது: கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி

நோயானது வாய்சப்பை, கால் சப்பை, வாய் காணை, கால்காணை என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இந்த நோயானது பெரும்பாலும் மழைக்காலங்களில் கால்நடைகளை தாக்குகிறது. இந்த நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியமாகும். ஒரு முறை போடப்படும் தடுப்பூசி மூலம் 4 மாத காலத்திற்கு கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு திறனை கூட்டலாம்.

பல்வேறு காரணங்களால் தடுப்பூசி போடாத கால்நடைகளில் நோய் எதிர்ப்பு திறன் குறையும்போது இந்த நோய் ஏற்படுவதை தடுக்க இயலாது. இதுபோன்ற நோய் ஏற்பட்ட மாடுகளுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வதன் மூலமாக நோய் பாதிப்பை குறைக்கலாம்.

வாய் மற்றும் நாக்கில் புண் இருப்பதால் பசுந்தீவனம், உலர் தீவனங்களை உட்கொள்ள இயலாது. ஆகையால் கஞ்சி காய்ச்சி ஆற வைத்து கால்நடைகளுக்கு கொடுக்கலாம். இயற்கை வழி சிகிச்சை முறைகளையும மேற்கொள்ளலாம்.

சீரகம், வெந்தயம் மற்றும் மிளகு போன்றவற்றை தலா 20 கிராம் எடுத்து ஒரு மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து நன்கு அரைக்க வேண்டும். பின்னர் இதனுடன் 20 கிராம் மஞ்சள், பூண்டு நான்குபல், 100 கிராம் வெல்லம் போன்றவற்றை சேர்த்து பசைபோல தயார் செய்ய வேண்டும்.

இறுதியாக முழு தேங்காயில் இருந்து பெறப்பட்ட தேங்காய் துருவலை சேர்க்க வேண்டும். இதனை சரிபாதியாக காலை, மாலை வேளைகளில் கொடுக்க வேண்டும். கலவை கொடுத்த பிறகு இறுதியாக 50 கிராம் அளவிற்கு வெண்ணெய், நெய் சேர்த்து வாய்ப்புண்ணின் மேல் தடவினால் சீக்கிரம் ஆறிவிடும். இதனை குறைந்தது 4, 5 நாட்கள் வரை தொடர்ந்து செய்து வரவேண்டும்.

கால் குளம்புகளில் உள்ள புண் மற்றும் மடிக்காம்புகளில் உள்ள புண்ணிற்கு பூண்டு 10 பல், மஞ்சள் 10 கிராம், துளசி, குப்பைமேனி, மருதாணி, வேப்பிலை தலா 10 இலைகள் போன்றவற்றை நன்கு அரைத்து அதனுடன் ஒரு லிட்டர் நல்லெண்ணெய் சேர்த்து 10 நிமிடம் வரை சூடுபடுத்தி பின்னர் ஆறவைக்க வேண்டும். இதனை கால்குளம்பு, மடிக்காம்பு மீது தடவி விட வேண்டும். மேலும் கால்நடைகளை பொதுவான மேய்ச்சல் நிலங்களுக்கு கொண்டு செல்லக்கூடாது. மாடுகளை வாங்குதோ, விற்பதோ கூடாது. வெளி ஆட்களை பண்ணைக்குள்

அனுமதிக்க வேண்டும். கால்நடைகள் உள்ள கொட்டகையின் தரைப்பகுதியை நன்கு சுத்தம் செய்து அதன் மேல் சுண்ணாம்பு தூள் அல்லது பிளீச்சிங் பவுடரை தூவ வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக கிருமிகளின் எண்ணிக்கையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கால்நடைகளை நோயில் இருந்து காப்பாற்றலாம் என்று தெரிவித்துள்ளனர்.

**கோமாரி நோய் தடுக்க நடவடிக்கை கோரி பால் உற்பத்தியாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

கடவூர், : கோமாரி நோயை கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கை எடுக்க கோரி கடவூர் அருகே காணியாளம்பட்டியில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

தமிழகத்தில் கோமாரி நோய்கள் தாக்குதலால் ஏரா ளமான மாடுகள் உயிரிழந்து உள்ளன. கரூர் மாவட்டம் முழுவதும் வேகமாக பரவிவ ரும் இந்தநோயை கட்டுப்படுத்த போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். கோமாரி நோயால் இறந்த கால்நடை கள் குறித்து முறையாக கணக்கெடுப்பு நடத்தி உரிய நிவா ரணம் வழங்க வேண்டும். இறந்த கால்நடைகளுக்கு தலா ரூ.25 ஆயிரமும், நீல நாக்கு நோய்தாக்கி இறந்த ஆடுகளுக்கு தலாரூ.5 ஆயிர மும் இழப்பீடு வழங்க வேண் டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி கடவூர் அருகே காணியாளம்பட்டியில் நேற்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு விவசாய சங் கம் கடவூர் ஒன்றிய செய லாளர் பழனிவேல் தலைமை வகித்தார். பால் உற்பத்தியா ளர் சங்கம் மாநிலக்குழு உறு ப்பினர் ராமசாமி முன்னிலை வகித்தார். தாந்தோணி ஒன்றிய தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் ராஜலிங்கம் வரவேற்றார். ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் சண்முகசுந்தரம் கலந்து கொண்டு பேசினார். பால் உற்பத்தியாளர்கள் செல்வராஜ், மலைக்கொழுந்து, மாணிக்கம், ஜான்மோகன்ராஜ், பிச்சை, வெறியம்பட்டி தங்கவேல், அர்ச்சுணன், சக்தி, சின்னான்டிபட்டி தேவராஜ், பிச்சைமுத்து, பழனிச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். வெள்ளி யனை ராஜாங்கம் நன்றி கூறினார்.

கரூர்: கரூர் வெள்ளியணையில் நேற்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்த்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பால் உற்பத்தியாளர் சங்க தாந்தோணி ஒன்றிய செயலாளர் வையாபுரி தலைமை வகித்தார். நிர்வாகிகள் ராமசாமி, ஜோதிபாசு, ராஜாங்கம் முன்னிலை வகித்தனர்.
விவசாய சங்க மாவட்ட செயலாளர் சண்முகசுந்தரம் கோரிக்கை வலியுறுத்தி பேசினார். பால்உற்பத்தியாளர் சங்கம், விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.30, எருமைப்பாலுக்கு ரூ.40, தமிழக அரசு கொள்முதல் விலை அளிக்க வேண்டும். 50சதவீத மானிய விலையில் மாட்டுத்தீவனம் வழங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 26.11.2013

மீன்வளத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நாட்டுப்படகு மீனவர்கள் முற்றுகை



தூத்துக்குடி,

தூத்துக்குடி மீன்வளத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நாட்டுப்படகு மீனவர்கள் நேற்று மாலை திடீர் முற்றுகையிட்டு மனு கொடுத்தனர்.

முற்றுகை

தூத்துக்குடி மாவட்ட அனைத்து கடலோர கிராமங்களை சேர்ந்த நாட்டுப்படகு மீனவர்கள் நேற்று மாலை புன்னக்காயல் குழந்தை மச்சாது, திரேஸ்புரம் ஸ்மைலன், ஆர்.ராஜ் மற்றும் நிர்வாகிகள் தலைமையில் தூத்துக்குடி மீன்பிடி உதவி இயக்குனர் அலுவலகத்துக்கு வந்து முற்றுகையிட்டனர். பின்னர் உதவி இயக்குனர் சேகரிடம் ஒரு கோரிக்கை மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறி இருப்பதாவது:–

<u>நடவடிக்கை</u>

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் இருந்து தொழில் செய்யும் விசைப்படகுகள் காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை மட்டுமே தொழில் செய்ய வேண்டும் என்று அரசு உத்தரவு உள்ளது. ஆனால் இந்த உத்தரவை மீறி காலை 4 மணிக்கு சென்று விட்டு இரவு 12 மணி வரை தொழில் செய்து வருகின்றனர். இதனால் நாட்டுப்படகு மீனவர்களுக்கு வலைகள் மற்றும் மீன்பிடி சாதனங்கள் பெருமளவில் சேதம் அடைந்து உள்ளது. ஆகையால் விதிமுறை மீறி செயல்படும் விசைப்படகு மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறி இருந்தனர்.

## இறந்து போன மாடு துண்டாக கிடந்ததால் பரபரப்பு



சோமரசம்பேட்டை,

தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களாக கோமாரி நோயால் தஞ்சாவூர், நாகை, திருவாரூர், கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் கறவை மாடு மாடுகள் செத்து மடிந்தன. இந்தநிலையில் திருச்சி மணிகண்டம், அந்தநல்லூர் ஆகிய ஒன்றியங்களில் உள்ள 200–க்கும் மேற்பட்ட மாடுகள், ஆடுகள் இறந்து உள்ளன. இதனால் தற்போது மணிகண்டம், அந்தநல்லூர் ஆகிய ஒன்றிய பகுதிகளில் கோமாரி நோயால் இறந்த மாடுகளை உய்யக்கொண்டான் ஆற்றில் விடும் அவலநிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு உள்ளனர். ஒரு சிலர் பொக்ளின் இயந்திரம் மூலம் குழி பறித்து புதைத்தனர். இந்த நிலையில் திருச்சி – மதுரை மெயின் ரோட்டில் பஞ்சப்பூர் அருகே இறந்த மாட்டை இரண்டாக அறுத்து மாட்டு

தோலை மட்டும் எடுத்து விட்டு 2 துண்டமாக ரோட்டின் ஓரத்தில் யாரோ மர்ம மனிதர் போட்டு சென்று உள்ளனர். அந்த வழியாக செல்பவர்கள் ஏதோ மனித உடல் என்று நினைத்து பர்த்தம் வண்ணம் செல்கிறார்கள். இதனால் இப்பகுதியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

**வீணாகும் உணவுப்பொருள்களில் காய்கறி, பழங்கள் அதிகம் ஆண்டுக்கு ரூ.13,300 கோடி இழப்பு**



ஜெயஸ்ரீ போஸ்லே

பூனா, நம் நாட்டில் வீணடிக்கப்படும் உணவுப்பொருள்களில் காய்கறி, பழங்கள்தான் மிக அதிகமாக உள்ளது. இந்த வகையில் ஆண்டுக்கு ரூ.13,300 கோடி அளவிற்கு இழப்பு ஏற்படுகிறது என எமர்சன் கிளைமேட் டெக்னாலஜிஸ் இந்தியாவின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

**இந்தியா 2–வது இடம்**

சர்வதேச அளவில் காய்கறி, பழங்கள் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இருந்தாலும் உற்பத்தியாகும் மொத்த காய்கனிகளில் 18 சதவீதம் வீணடிக்கப்பட்டு விடுகிறது. இதன் மதிப்பு ரூ.13,300 கோடி. நாட்டில் வீணாகும் உணவு தானியங்களையும் கணக்கில் சேர்த்தால் ஆண்டுக்கு ரூ.44 ஆயிரம் கோடி அளவிற்கு இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பில் காய்கறி மற்றும்

பழங்களின் பங்கே மிக அதிகம்.உணவு தானியங்களும், காய்கறி–பழங்களும் இந்த அளவிற்கு வீணாவதற்கு இரண்டு காரணங்கள்தான் முக்கியமாக சுட்டிக் காட்டப்படுகின்றன. ஒன்று, குளிர்பதன கிடங்குகள் போதுமான அளவிற்கு இல்லாதது. மற்றொன்று, குளிர்சாதன வசதி கொண்ட சரக்கு வாகனங்கள் மிக குறைவாக இருப்பது. நம் நாட்டில் தற்போது 6,300 குளிர்பதன கிடங்குகள் உள்ளன. இவற்றால் 3.01 கோடி டன் உணவுப் பொருள்களை பாதுகாக்க முடியும். ஆனால் நமக்கு உண்மையில் 6.10 கோடி டன் அளவு உணவுப் பொருள்களை பாதுகாக்கும் அளவிற்கு குளிர்பதன கிடங்குகள் தேவைப்படுகின்றன. இந்த அளவிற்கு குளிர்பதன கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க வேண்டுமானால், 2016–ஆம் ஆண்டிற்குள், ரூ.55 ஆயிரம் கோடி முதலீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் 6,000 டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு ஒன்றை அமைக்கத் தேவையான நிலம் மற்றும் கட்டிடங்கள் நிர்மாணமும் பெரிய சவாலாக உள்ளது. குளிர்பதன கிடங்குகள் ஆங்காங்கே சிதறுண்டு கிடக்கின்றன. மேலும் நான்கு மாநிலங்களில் மட்டுமே உற்பத்தி மையங்களுக்கு அருகில் 60 சதவீத குளிர்பதன கிடங்குகள் அமைந்துள்ளன. மற்ற 24 மாநிலங்களில் விநியோக மையங்களுக்கு அருகில் சில குளிர்பதன கிடங்குகள் உள்ளன. மேலும் இத்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிடமும் மிக சிறந்த பாதுகாப்பு மற்றும் சேமிப்பு நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வு மிக குறைவாக உள்ளது.

**விழிப்புணர்வு**

எமர்சன் கிளைமேட் டெக்னாலஜிஸ் இந்தியா நிறுவனம் அமெரிக்காவைச் சேர்ந்தது. இந்நிறுவனம் குளிர்பதன கிடங்குகள் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறது. இந்த வகையில் சக்கான் பகுதியில் இந்நிறுவனம் தனது முதல் குளிர்பதன மற்றும் விநியோக மையத்தை நிறுவியுள்ளது.

நடப்பு நிதி ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பொருளாதாரத்தில் **4.8** சதவீத வளர்ச்சி




புதுடெல்லி,

நிபுணர்களின் மதிப்பீடுகளுக்கு இணையாக, நடப்பு நிதி ஆண்டின் இரண்டாவது காலாண்டில் (ஜூலை–செப்டம்பர்) நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, முதல் காலாண்டு வளர்ச்சியை காட்டிலும் 0.4 சதவீதம் அதிகமாகும்.

**நான்கு காலாண்டுகளாக...**

2012 டிசம்பர் மற்றும் 2013 மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டுகளில் பொருளாதார வளர்ச்சி முறையே 4.7 சதவீதம் மற்றும் 4.8 சதவீதமாக இருந்தது. ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வளர்ச்சி 4.4 சதவீதமாக குறைந்தது. ஆக, தொடர்ந்து நான்கு காலாண்டுகளாக பொருளாதார வளர்ச்சி 5 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.

கடந்த 2010 மற்றும் 2011–ஆம் ஆண்டுகளில் மொத்த விலை பணவீக்கம் சராசரியாக 10 சதவீதமாக இருந்தது. இதனை கட்டுப்படுத்தும் வகையில் ரிசர்வ் வங்கி 2010 மார்ச் மாதத்திலிருந்து 2011 அக்டோபர் வரையிலான 20 மாதங்களில் முக்கிய கடனிற்கான வட்டியை 13 முறை உயர்த்தியது.

**வட்டிச் செலவினம்**

இதன் காரணமாக நிறுவனங்களின் வட்டிச் செலவினம் அதிகரித்தது. மேலும், நிறுவனங்களும் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள தயக்கம் காட்டி வந்தன. இதுபோன்ற காரணங்களால், கடந்த நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 5 சதவீதமாக குறைந்தது.

நடப்பு ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முக்கிய எட்டு துறைகளின் உற்பத்தி 8 சதவீதம் அதிகரித்துள்ளது. அம்மாதத்தில் தொழில் துறையிலும் 2 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டது. நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் தொழில்துறை உற்பத்தி 1.1 சதவீதம் குறைந்தது. இரண்டாவது காலாண்டில் உற்பத்தி 1.7 சதவீதம் உயர்ந்துள்ளது. பொருளாதாரத்தை கணக்கிடுவதில் தொழில்துறையின் பங்கு 26 சதவீதமாக உள்ளது. இரண்டாவது காலாண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

<u>**ஏற்றுமதி**</u>

முதல் காலாண்டில் சரக்குகள் ஏற்றுமதி 1.4 சதவீதம் குறைந்து இருந்தது. இந்நிலையில், மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தால் ஏற்றுமதியில் விறுவிறுப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. இரண்டாவது காலாண்டில் ஏற்றுமதியில் இரட்டை இலக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மத்திய அரசின் செலவினம் முதல் காலாண்டைக் காட்டிலும் இரண்டாவது காலாண்டில் 11 சதவீதம் அதிகரித்துள்ளது.

<u>**வேளாண் துறை உற்பத்தி**</u>

நாட்டின் மக்கள் தொகையில் 60 சதவீதத்தினர் வேளாண்மை மற்றும் அது சார்ந்த தொழில்களை சார்ந்துள்ளனர். எனினும், பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண் துறையின் பங்கு 14.1 சதவீதமாகத்தான் உள்ளது. பருவமழை நன்றாக உள்ளதால் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரித்து வருகிறது. இரண்டாவது காலாண்டில் வேளாண் துறை உற்பத்தி 4.6 சதவீதம் உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின்

இதே காலாண்டு வளர்ச்சியை (1.7 சதவீதம்) காட்டிலும் இரண்டு மடங்கிற்கு மேல் அதிகமாகும்.

அனுமதி பெறுதல், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளால் முடங்கி கிடக்கும் திட்டங்களை முடுக்கி விடும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ரூ.3.50 லட்சம் கோடி மதிப்பிலான முதலீட்டு திட்டங்களுக்கு மத்திய அரசு அண்மையில் அனுமதி அளித்தது.

இந்நிலையில், ஏற்றுமதி அதிகரித்து இறக்குமதி குறைந்து வருவதால் நடப்பு நிதி ஆண்டில் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில்) நடப்பு கணக்கு பற்றாக்குறை 2.5 சதவீதமாக குறையும் என சில நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு உயர வாய்ப்புள்ளது.

**<u>நம்பிக்கை</u>**

இதுபோன்ற காரணங்களால் நடப்பு நிதி ஆண்டின் இரண்டாவது அரையாண்டிலிருந்து நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பாதைக்கு திரும்பும் என ப.சிதம்பரமும், ரிசர்வ் வங்கி கவர்னர் ரகுராம் ராஜனும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். எனவே, இந்த நிதி ஆண்டில் பொருளாதாரத்தில் 5.3 சதவீதம் வளர்ச்சி ஏற்படும் என பிரதம மந்திரியின் பொருளாதார ஆலோசனைக் குழுவும், 5.5 சதவீதம் வளர்ச்சி ஏற்படும் என நிதி அமைச்சகமும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

கடந்த 2005–06, 2006–07 மற்றும் 2007–08 ஆகிய மூன்று நிதி ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் பொருளாதார வளர்ச்சி 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. உலக பொருளாதார சீர்குலைவால் 2008–09–ஆம் நிதி ஆண்டில் வளர்ச்சி 6.7 சதவீதமாக குறைந்தது. மத்திய அரசு பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் உற்பத்தி மற்றும் சேவை வரிகளை குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கியது. இதன் காரணமாக 2009–10–ஆம் நிதி

ஆண்டில் 8.4 சதவீதமாகவும், 2010–11–ஆம் நிதி ஆண்டில் 9.3 சதவீதமாகவும் பொருளாதார வளர்ச்சி உயர்ந்தது.

**பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் மர எலிகள் தொல்லையால் தென்னை விவசாயிகள் அச்சம்**

துடியலூர், –

கோவை பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் தென்னை மரத்தில் ஏறும் எலிகளால், தேங்காய்கள் சேதமடைவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

**<u>தென்னை விவசாயம்</u>**

பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் கூடலூர், கோவனூர், காளிபாளையம், வெள்ளமடை உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. தென்னைக்கு சொட்டு நீர்பாசனம் இருந்தால் போதுமானதாகும். மற்ற பயிர்களை போல தினசரி கண்காணிப்பு அதிகம் தேவையில்லை. நன்கு வளர்ந்த தென்னை மரங்களுக்கு இடையே ஊடுபயிர் விவசாயம் செய்யலாம். தென்னை விவசாயிகளுக்கு மாதந்தோறும் குறிப்பிட்ட அளவு வருமானம் வருகிறது. மற்ற பயிர்களை காட்டிலும், தென்னை விவசாயத்தில் வருமானம் உள்ளதால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியாகஇருந்தனர்.

**<u>மர எலிகளால் தொல்லை</u>**

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக தென்னை மரம் ஏறும் மர எலிகளால், பெரியநாயக்கன்பாளையம் வட்டார விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இது குறித்து தென்னை விவசாயிகள் கூறுகையில்,“தென்னை மரத்தில் ஏறும் மர

எலிகள் இளநீ காய்களை துளையிட்டு, அதில் உள்ள முதிர்ச்சி அடையாத தேங்காய் பருப்புகளை சேதப்படுத்தி, காய்களை மரத்தில் இருந்து கீழே தள்ளி விட்டு விடுகின்றன. இதனால், ஒவ்வொரு தென்னை மரத்திலும், குறிப்பிட்ட அளவு தேங்காய்கள் சேதமடைகின்றன. தென்னை மரத்தில் ஏறி, தேங்காய் பறிக்க ஆட்கள் கிடைக்காத காரணத்தால், மரத்தில் இருந்து தானாக கீழே விழும் காய்களை எடுத்து விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். ஆனால், மலையோரம் உள்ள தென்னந்தோப்புகளில் காட்டுப் பன்றிகள் கூட்டம், கீழே விழும் தேங்காய்களை எடுத்து, உடைத்து, தின்று விடுகின்றன. இதனால் விவசாயிகளுக்கு உரிய பலன் கிடைக்காத நிலை இருந்து வருவதாக கூறுகின்றனர்.

<u>தடுக்கும் முறை</u>

இது தொடர்பாக பெரியநாயக்கன்பாளையம் வேளாண் உதவி இயக்குனர் ஷபி அகமது கூறுகையில், தென்னை மரத்தில் உள்ள தேங்காய்களை சேதப்படுத்தும் மர எலிகளை சுலபமாக கட்டுப்படுத்தலாம். பெரிய தென்னை மட்டையை நடுவாக்காக கிழித்து ஒரு பகுதியை உச்சித்தண்டின் கீழ் சுற்றியும், மறு பகுதியை எதிர் திசையிலும் சுற்ற வேண்டும். இது தவிர, தென்னை மரத்தின் நடுத்தண்டில் 2 அடியில் இருந்து 3 அடிக்கு சீமைக்கருவேல் அல்லது முள்கம்பிகளை சுற்றிவிடலாம். இதனால் எலிகள் மரத்தில் ஏறுவதை தடுக்க முடியும் என்றார்.

**கோவை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை கைகொடுக்குமா? இந்த மாதத்தில் 46.5 மி.மீ மழை பதிவு**



கோவை,கோவை
மாவட்டத்தில் வடகிழக்கு
பருவமழை
கைகொடுக்குமா? என்ற
எதிர்பார்ப்பு உள்ளது.

<u>வடகிழக்கு பருவமழை</u>

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்கு பருவ மழை ஜூன், ஜூலை, ஆகஸ்டு வரை பெய்யும். இதைத் தொடர்ந்து அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கும்.

இந்த நிலையில் கடந்த தென்மேற்கு பருவமழையை பொறுத்தவரை ஒரு சில மாவட்டங்களை தவிர, பெரும்பாலான மாவட்டங்களில் பொய்த்து போனது. கோவை மாவட்டத்திலும் எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதனால் நீர் நிலைகளில் தண்ணீர் மட்டம் உயரவில்லை. கோவை மாவட்டத்தை பொறுத்தவரை குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி, பில்லூர் அணைகளில் போதிய தண்ணீர் உள்ளதால் வருகிற கோடை காலம் வரை குடிநீர் பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

<u>எதிர்பார்த்த அளவு இல்லை</u>

இதற்கிடையில் கோவை மாவட்டம் உள்பட தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை எந்த அளவுக்கு பெய்யும் என்று, கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக காலநிலை ஆராய்ச்சி மையம் ஆய்வுகள் மேற்கொண்டது. அதன்படி தமிழகத்தில் உள்ள பெரும்பாலான மாவட்டங்களில் 60 சதவீதம் மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பெரும் பான்மையான மாவட்டங்களில் மழை பெய்துவருகிறது. ஆனால் கோவை மாவட்டத்தில் இதுவரை எதிர்பார்த்த மழைப்பொழிவு இல்லாமல் உள்ளது. கோவை மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த அக்டோபர் மாதத்தில் 141.2

மி.மீட்டர் மழை பதிவானது.கருணை காட்டுமா? இந்த (நவம்பர்) மாதத்தில் 46.5 மி.மீட்டர் தான் பதிவாகி உள்ளது. இதே மாதத்தில் கடந்த ஆண்டு 22.4 மி.மீட்டர்தான் பதிவானது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் இன்னும் காற்றழுத்த தாழ்வு மண்டலங்கள் உருவாக வாய்ப்புகள் உள்ளதாக தெரிகிறது. இதன் அடிப்படையில் இன்னும் 1 மாதம் முழுமையாக உள்ளதால் கோவை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் கூறினார். இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை கருணை காட்டுமா? என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

**ஈரோடு கவுந்தப்பாடி அருகே புதிய ரக கரும்பு அறிமுக விழா**



ஈரோடு, –

கவுந்தப்பாடி அருகே புதிய ரக கரும்பின் அறிமுக விழா நடைபெற்றது.

**புதிய ரக கரும்பு**

ஈரோடு மாவட்டத்தில் மஞ்சளுக்கு அடுத்த பணப்பயிராக கருதப்படுவது கரும்பு ஆகும். மாவட்டத்தில் சுமார் 42 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் கரும்பு சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கும் சாகுபடி செலவினங்களை குறைக்கவும் கோயமுத்தூரில் உள்ள மத்திய அரசின் கரும்பு இனப்பெருக்கு நிறுவனத்தின் மூலம் புதிய ரகமான கோ 99006 என்ற ரகத்தினை வெளியிட்டுள்ளது. இந்த ரகத்தின் மகசூல் திறனறிவதற்கான பண்ணைத் திடல் பரிசோதனை மைராடா வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் கவுந்தப்பாடி அருகே உள்ள குட்டிபாளையம் கிராமத்தில் உள்ள ஹரிஹரசுதன் என்ற விவசாயியின் பண்ணையில் நடைபெற்றது.

**பிரச்சினைகள், சவால்கள்**விழாவிற்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் பெ.அழகேசன் தலைமை தாங்கினார். சக்தி சர்க்கரை ஆலையின் பொது மேலாளர் செழியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கரும்பு சாகுபடியில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள் அதனை விவசாயிகள் கையாளும் விதம் குறித்து எடுத்துரைத்தார். புதிய ரகத்தினை வெளியிட்ட கரும்பு இனப்பெருக்கு நிறுவனத்தின் பயிர் உற்பத்தி முன்னேற்றத்துறையின் தலைவர் எம்.என்.பிரேமசந்திரன் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும், கரும்பில் உள்ள பல்வேறு ரகங்கள் மற்றும் அதன் சிறப்புகளை விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். இறுதியாக பண்ணைத் திடல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட விவசாயி ஹரிஹரசுதன், கலந்து கொண்ட விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு தன்னுடைய புதிய ரக கரும்பு சாகுபடியின் அனுபவங்களை நேரடியாக பகிர்ந்து கொண்டார்.**அதிக மகசூல்** அப்போது புதிய ரக கரும்பு செவ்வழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத் தன்மை கொண்டது. நீர் தேங்கும் நிலங்களில் சிறப்பாக வளரக்கூடியது. அதிக வறட்சி மற்றும் உவர்த் தன்மையை தாங்கி வளரக்கூடியது. வெல்லம் காய்ச்சுதலுக்கேற்ற அதிக சர்க்கரை சத்துள்ள ரகம். நல்ல உயரமாகவும் அதிக தூர்களுடனும் வளரக்கூடியது. மறுதாம்பு பயிரில் அதிக மகசூல் கொடுக்கும். ஒரு ஏக்கருக்கு சராசரியாக 78 டன் மகசூல் கொடுக்கும் என்றார். இந்த பண்ணைத்திடல் பரிசோதனை மற்றும் வயல் விழாவில் விஞ்ஞானிகள் ராக்கியப்பன், ஹேமப்ரபா, கீதா, ரமேஷ்குமார், அண்ணாதுரை, அப்புனு மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். முன்னதாக ராஜீலாசாந்தி வரவேற்று பேசினார். முடிவில் வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப அதிகாரி ச.சரவணக்குமார் நன்றி கூறினார்.

**ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை தொடங்கியது 2 எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்பு**



ஆம்பூர்

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆம்பூர், குடியாத்தம், காட்பாடி, வேலூர் (பகுதி) தாலுகாக்களையும், திருவண்ணாமலை

இந்த ஆலையில் 2013–2014–ம் பருவத்திற்கான கரும்பு அரவை தொடக்க விழா நேற்று நடந்தது. விழாவுக்கு சர்க்கரை ஆலையின் தலைவர் எம்.மதியழகன் தலைமை தாங்கினார். மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) கார்த்திகா குத்துவிளக்கு ஏற்றி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் அ.அஸ்லம்பாஷா, கலையரசு ஆகியோர் கரும்பு அரவையை தொடங்கி வைத்து பேசினர்.அப்போது அவர்கள், கரும்பு ஏற்றி வரும் விவசாயிகளுக்கு தேசிய நெடுஞ்சாலையில் சுங்கவரியை ரத்து செய்ய சர்க்கரை ஆலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர். நிகழ்ச்சியில் பாரதீய ஜனதா கட்சியின் மாவட்ட தலைவர் கொ.வெங்கடேசன், வடபுதுப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.எஸ்.சங்கர், கீழ்முருங்கை தலைவர் ஜி.எஸ்.ரவி, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர்கள் எஸ்.ரவி, பழனி, வாசுதேவன் மற்றும் நிர்வாக இயக்குனர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.தமிழ்நாட்டில் கூட்டுறவு துறையில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இரு சர்க்கரை ஆலைகளில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும் ஒன்றாகும். இந்த ஆலை நாள் ஒன்றுக்கு 1400 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யும் திறன் கொண்டதாகும்.